Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 13 (21.06.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:265

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கோரி

# வடமராட்சியில் பெரும் கண்டனப்பேரணி!

## 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டனர்!



வடமராட்சி —

தென்னிலங்கையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள், பேரினவாத சக்திகள் நடத்திவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை கண்டித்தும், பொதுக்கட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்தக்கோரியும், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களிலிருந்து படையினரை உடனடியாக வெளியேறக் கோரியும் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு நடத்திய மாபெரும் கண்டனப் பேரணி நேற்று வடமராட்சியில் இடம் பெற்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேரணியில் ஒலித்த கோஷங்கள்!

'நாடகம் ஆடும் நாட்டின் தலைவி நடித்ததும் போதும் நடப்பதைத் தெரிவி!', 'பொதுக் கட்டமைப்பை உடனே நிறுவுக!', 'புரிந்துணர்வு ஒப்பந்தம் என்னாச்சு பிரிந்து போவதும் நிஜமாச்சு!', சர்வதேசமே எங்கள் உரிமைப்போராட்டத்தை அங்கீகரி', 'பேரினவாதப் பௌத்த அரசே! போரைத் தொடங்கினால் பொசுங்கிப்போவாய்!', 'படையினர் காவல் யாருக்கு? முடிவெடுபடைகள் முடிவதற்குள்!' (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் கிழக்கில் வெட்டிக்கொலை!

அம்பாறை —

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்றை சேர்ந்த ரவி என அழைக்கப்படும் அழகையா ரவிச்சந்திரன் (வயது 38) என்ற என்பவரே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் கருங்கொடித்தீவு வயல்வெளிப் பிரதேசத்திலிருந்து நேற்றுக்காலை பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புளொட் உறுப்பினர்

## பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் கையெழுத்திட வாய்ப்பில்லையாம்!

### அதிருப்தி தெரிவிக்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு —

உத்தேச சுனாமி நிவாரணக் கட்டமைப்பில் கையொப்பமிடும் தரப்பினராகச் செயற்படும் வாய்ப்பு முஸ்லிம் தலைமைக்குக் கிடைக்காது என நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தமை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

நேற்று மாலை கொழும்பு வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது கையொப்பமிடும் தரப்பினராக முஸ்லிம் தலைமைக்கு இடமளிக்க வாய்ப்பில்லை



என மிகத் தெளிவாக அவர் தம்மிடம் தெரிவித்ததாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

...விதார் ஹெல்கிசன் தெரிவித்தமை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது அதிருப்தியை

இந்தச் சந்திப்பின்போது கையொப்பமிடும் தரப்பினராக முஸ்லிம் தலைமைக்கு இடமளிக்க வாய்ப்பில்லை

தெரிவித்ததாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை!



வவுனியா —

வவுனியா - தாளிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஓட்டோ சாரதியாகப் பணிபுரியும் தர்மலிங்கம் அசோகன் (வயது 26) என்பவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மருதானையில் வெடிபொருட்கள் மீட்பு!

கொழும்பு —

கொழும்பு - மருதானை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தின் முன்னால் அநாதரவாகக் கிடந்த பையொன்றிலிருந்து சில வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுகள் இரண்டு, ரி-56 ரக துப்பாக்கிக்குரிய ரவைகள் மற்றும் விமானப்படைக்குரிய சீருடைகள் என்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை எதிர்கொள்ள கட்சிகள் தயாராகின்றன!

கொழும்பு —

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. விலகியதால் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையை அடுத்து - சகல கட்சிகளும் தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 16 மாதங்களின் பின்னரே நடைபெறுமென ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படையாக அறிவித்திருந்த போதிலும், அவரது சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள்கூட தேர்தலுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விதார் ஹெல்கிசன் நேற்று கொழும்பை வந்தடைந்தார்!

கொழும்பு —

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் கொழும்பை வந்தடைந்தார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவரை, நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வரவேற்றார்.

கொழும்பு வந்த விதார் ஹெல்கிசன் - விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக இன்று காலை ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்துவாரென கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் தெரிவித்தது.

நாளை கிளிநொச்சி செல்லும் அவர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்துவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புப் பிரேரணைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார் சோபிததேரர்!

கொழும்பு —

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் தாம் அதனை கடுமையாக எதிர்க்கப்போவதாக ஜாதிகஹெல உறுமயவின் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பது தொடர்பாக ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவுக்கு ஓமல்பே சோபித தேரர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் -

உத்தேசப் பொதுக்கட்டமைப்பால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து புதிதாக எதுவும் கூற வேண்டிய தேவையில்லை. அதுகுறித்து இதுவரை போதியளவு பேசப்பட்டுள்ளன. ஜனாதிபதி தனது விருப்பப்படி அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடுவாரானால் அது என்றுமே (12 ஆம் பக்கம் பார்க்க)






EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2[illegible]0290/1

Your friend in the skies...

இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமான சேவை...



# வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளை அடுத்த மாதம் முதல் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக- வட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தல்பதாது தெரிவித்தார்.

நேற்று மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையார் விடுதியில் நடைபெற்ற வீதி விபத்துக்களை தடுப்பது மற்றும் வீதிப்போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பது பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

யாழ். மாவட்டத்தில் வேகத்தை அ… கருவி நேற்று முதல் பாவனைக்கு நடைமுறைப்படுத்தி வருவதாகவும், மோட்டார் சைக்கிளில் செல்கின்ற இருவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் - அவ்வாறு அணியாது செல்வோர் மீது குற்றப் பணம் அறவிடப்படும். அத்துடன் நிரையாகச் செல்வோர் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் பஸ் வண்டிகள், இலங்கைப் போக்குவரத்து பஸ் வண்டிகளின் பாதை ஒழுங்குகளும் தற்காலிகமாக மாற்றப் படவுள்ளது.

கஸ்தூரியார்வீதி, காங்கேசன்துறை வீதி மற்றும் முனீஸ்வரன் வீதி என்பன ஒருவழிப் பாதையாக மாற்றப்படவுள்ளது. இந்த நடைமுறைகள் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப் படும் என்றும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் பத்மநாதன் கருத்துத் தெரிவிக்கையில் -

வலிகாமம் பகுதியிலிருந்து வருகின்ற தனியார் பஸ்கள் மானிப்பாய் வீதி வழியாக ஸ்ரான்லி வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து பழைய தபாற்கந்தோர் வீதியால் பஸ் நிலையத்திற்கு சென்று பயணிகளை இறக்கிவிட்டு, மலாயன் கபே வீதியூடாக சத்திரத்சந்தி சென்றடைந்து வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள மினி பஸ் தரிப்பிடத்தில் தரித்து நிற்கும்.

பஸ் தரிப்பிடத்தில் தரித்து நிற்கும் பஸ் வண்டி முனீஸ்வரன் வீதியால் (ஒரு வழிப்பாதை) பஸ் நிலையத்தையடைந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கஸ்தூரியார் வீதியால் உரிய பிரதேசத்துக்கு செல்லும்.

வடபிராந்திய போக்குவரத்து பஸ் வண்டிகள், வலிகாமம், தெல்லிப்பளை, பலாலி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளிலிருந்து வரும் பஸ் வண்டிகள், ஆரிய குளம் சந்திக்கு வந்து ஆஸ்பத்திரி வீதியூடாக பஸ் நிலையத்திற்குச் செல்லும். பின்னர் அங்கிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கஸ்தூரியார் வீதியால் ஸ்ரான்லி வீதிக்குச் சென்று அங்கிருந்து அந்தந்தப் பிரதேசங்களுக்குச் செல்லும்.

இந்த வீதி ஒழுங்குகள் தொடர்பான அடையாளங்களை மாநகரசபை ஆணையாளர் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ். மாவட்ட போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், மோட்டார் வாகனப் பரிசோதகர், தனியார் மினிபஸ் சங்க பிரதிநிதிகள், வீதி அபிவிருத்திப் பணிப்பாளர், ஆட்டோ, கார் ஆகியவற்றின் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்கலந்து கொண்டனர்.

# உழவு இயந்திரம் ஏற்றிச்சென்ற படகு குறிகாட்டுவான் கடலில் மூழ்கியது!

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு எடுத்துச் சென்ற உழவு இயந்திரம் அதனை ஏற்றிச் சென்ற படகு சரிந்ததால், கடலில் மூழ்கியுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா உற்சவத்திற்கு தூக்கு காவடி எடுப்பதற்காக உழவு இயந்திரம் ஒன்றும், அதற்கான தளபாடங்களும் குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து எடுத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

உழவு இயந்திரம் ஏற்றும்போது படகு அசையாது இருப்பதற்காக கட்டப்பட்டிருந்த கயிறு அவிழ்க்கப்பட்டபோது படகு சரிந்ததால் கடலில் மூழ்கியது.

ஆலயத்திற்குச் செல்வதற்காக அங்கு கூடியிருந்த மக்களும், கடற்படையினரும் கவிழ்ந்த படகினை மீட்டனர். எனினும் உழவு இயந்திரத்தினை மீட்பதற்கான முயற்சிகள் நேற்று மாலை வரை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, மக்களின் நலன் கருதி மக்களுக்கு உயிராபத்து ஏற்படாத வகையில் பாதுகாக்க, படகு சேவையில் ஈடுபடும் போது 50 உயிர்காப்புக் கவசத்துடன் மேலதிகமாக படகு ஒன்றும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# அஸ்ரா வெற்றிக் கிண்ணத்திற்கான பாடசாலைகளுக்கிடையிலான போட்டி

யாழ்ப்பாணம்—

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் அஸ்ரா கிண்ணத்திற்கான 15 வயதிற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் இன்று யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

ஏ. பிரிவில் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியும் -

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதும் போட்டியும் -

பி. பிரிவில்- யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணியை எதிர்த்து சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதும் போட்டியும் -

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மைதானத்தில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து ஹாட்லி கல்லூரி மோதும் போட்டியும்-

சி. பிரிவில்-கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் மோதவுள்ளன.

இதேவேளை யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டி தொடரில் 15 வயதுப் பிரிவில் 3 ஆட்டங்கள் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதய கல்லூரி அணியும் -

தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மைதானத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனா கல்லூரி அணியும் -

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (58)

# உதை பந்தாட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் பருத்தித்துறை லீக்-வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் -

பிற்பகல் 3.30 மணிக்கு வலிகாமம் காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் -

பிற்பகல் 4.30 மணிக்கு தென்மராட்சி மகாவிஷ்ணு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# வலி. வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டி முடிவுகள் வருமாறு.

பிரிவு 1 வாசிப்பு

1 ஆம் இடம் - வி. துவாரகா (யாழ். சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி), 2ஆம் இடம் சி.கவிஜா (யாழ். மானிப்பாய் சோதிவேம்படி வித்தி), 3 ஆம் இடம் ம. ஷாதுஷா (யாழ். அராலி இந்துக் கல்லூரி).

பிரிவு 2 வாசிப்பு

1 ஆம் இடம் - ஞா.கீர்த்திகா (யாழ். மகாஜனாக் கல்லூரி), 2ஆம் இடம் மோ.சோபிகா (யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி), 3 ஆம் இடம் ம.சிவநோஷன் (யாழ்ப் பாணக் கல்லூரி).

பிரிவு 1 ஆக்கத்திறன் வெளிப்பாடு

1 ஆம் இடம் - நா.கபிலன் (யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தி), 2ஆம் இடம் து. டிலேக்கா (யாழ். சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி), ச.பிரணவன் (யாழ். நவாலி சென். பீற்றேஸ்).

பிரிவு 1 பேச்சு

1 ஆம் இடம் - சே.ஜேனுஷா (யாழ். இளவாலை கன்னியர் மடம் ம.வி.), 2ஆம் இடம் கே. கௌசிகன் (யாழ். மகாஜனாக் கல்லூரி), 3 ஆம் இடம் தே. காயத்திரி (யாழ். தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி).

பிரிவு 2 பேச்சு

1 ஆம் இடம் - ஹெ. ஆன் டோலினா (யாழ். இளவாலை கன்னியர்மடம் ம. வித்தி), 2ஆம் இடம் தங்கன் சிவதீபா (யாழ். இராமநாதன் கல்லூரி), 3 ஆம் இடம் இ. கஜனி (யாழ். யூனியன் கல்லூரி).

பிரிவு 3 பேச்சு

1 ஆம் இடம் - ம.ரொஷீன் மெலானி(யாழ். இளவாலை கன்னியர்மடம் ம.வி.), 2ஆம் இடம் பா.டெஜீபா (யாழ். இராமநாதன் கல்லூரி), 3 ஆம் இடம் தி.சேந்தன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

பிரிவு 4 பேச்சு

1 ஆம் இடம் - ந.சாகினி (யாழ். இளவாலை கன்னியர் மடம் ம.வி.), 2ஆம் இடம் ஸ்ரீ. இராகவர்த்தனி (யாழ். இராமநாதன் கல்லூரி),இடம் சி.தர்மசஸ்தன் (யாழ். யூனியன் கல்லூரி).

பிரிவு 5 வாசிப்பு

1 ஆம் இடம் - யோ.சுதாகரன் (யாழ். யூனியன் கல்லூரி), 2ஆம் இடம் சி.சாருஜா ( யாழ்ப்பாணக் கல்லூரி), 3 ஆம் இடம் தி.கபில்ராஜா (யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

பிரிவு 1 பாவோதல்

1 ஆம் இடம் - சி.நவநீதா (யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி), 2ஆம் இடம் பி.பிரவீந் (யாழ்ப்பாணக் கல்லூரி), இடம் யோ.காருண்யா(யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தி).

பிரிவு 2 பாவோதல்

1 ஆம் இடம் - கி. பார்த்தீபன் (யாழ்ப்பாணக் கல்லூரி), 2ஆம் இடம் அ. றதீபனா (யாழ். இராமநாதன் கல்லூரி), 3 ஆம் இடம் இ.தனுஷா (யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

பிரிவு 3 பாவோதல்

1 ஆம் இடம் - கா.சர்மிளா (யாழ். வட்டு. மத்திய கல்லூரி), 2ஆம் இடம் சு. தசாங்கன் (யாழ். யூனியன் கல்லூரி), 3 ஆம் இடம் ஜெ. எழிலரசி (யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி).

பிரிவு 4 பாவோதல்

1 ஆம் இடம் - சி.கேசலா (யாழ். யூனியன் கல்லூரி), 2ஆம் இடம் அ.கீதாஞ்சலி (யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் உ.சிலானி (யாழ். வட்டு. மத்திய கல்லூரி).

பிரிவு 5 பாவோதல்

1 ஆம் இடம் - ச.ஜசிந்தன் (யாழ்பாணக் கல்லூரி), 2ஆம் இடம் க.கனிஷ்டா (யாழ். இராமநாதன் கல்லூரி), 3 ஆம் இடம் ம.சியாமளா (யாழ். அருணோதயாக் கல்லூரி).

(தொடரும்)


**சிறு விளம்பரம்**

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)


# காணி பற்றிய முக்கிய அறிவித்தல்

**கீழே குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் 2005-06-30 ஆம் நாள் முதல் செயற்படுத்தப்படவுள்ளதென்பதை சகலரினதும் கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.**

1) காணித் தேவைக்காக காடுகளை அழிப்பதும், பற்றைக் காடுகளை வெட்டுவதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

2) காணி வழங்கப்பட்டு நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யாது, உரிமையாளரும் இங்கு இல்லாது பயன்படுத்தப்படாதிருக்கும் காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சி செய்வதோ, உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் இல்லாது உறவினர் ஆட்சி செய்வதோ முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது.

3) 2இல் காட்டப்பட்ட காணி தொடர்பில் எவரும் தற்போது இருப்பாரேயானால் அவர் தமிழீழ நிர்வாகசேவை நடுவப் பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமில்லாது தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4) பொதுத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், நீர்ப்பாசன குளப்படுக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகள், கழிவு வாய்க்கால்கள், வீதிகள் என்பனவற்றுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை எவராவது அத்துமீறிப் பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்படுகின்றது. அத்துமீறிப் பிடித்து ஆட்சிசெய்து வந்தால் அக்காணிகளை உரிய தேவைக்காக மீள சுவீகரிப்புச் செய்யப்படும்.

5) 4இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் ஏதாவது காணியினை அத்துமீறிப் பிடித்து ஆட்சி செய்து வருவாரேயானால் அவர்கள் தாம் பிடித்து வைத்துள்ள காணி தொடர்பான விபரத்துடன் தமிழீழ நிர்வாக சேவை, நடுவப் பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள செயலகத்துடன் தாமதமின்றித் தொடர்புகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

6) இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அரச காணிகளை துப்பரவு செய்து வசித்து வந்த குடும்பங்கள் மீளத் தமது இருப்பிடங்களுக்குச் சென்றதும், அக் காணிகளைத் தற்போது வேறு நபரால் ஆட்சிப்படுத்தவோ அல்லது அபிவிருத்தி செய்யவோ முடியாது. அக் காணி பொதுத் தேவைக்காக எடுக்கப்படும்.

7) மேலே காட்டப்பட்ட நடவடிக்கைகளுக்குக் கீழ்ப்படியாது அதனை மீறிச் செயற்படுபவர்கள் மீது தமிழீழ காவற்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

தமிழீழ நிர்வாக சேவை,
நடுவப் பணியகம்
தமிழீழம்.

(சி -3674)

## ஜே.வி.பி. அமைச்சுக்களில் முறைகேடுகள் அடங்கிய கடிதக் கோவைகள் மாயம்!

கொழும்பு —

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர்கள் பொறுப்பாக இருந்த அமைச்சுக்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரியளவிலான முறைகேடுகளுடன் தொடர்புடைய 130 கடிதக் கோவைகள் காணாமற்போயுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசிலிருந்து ஜே.வி.பி விலகுவதற்கு முன் இந்தக் கடிதங்கள் மாற்றப்பட்டுள்ளதாக விசேட விசாரணைப் பிரிவிற்கு தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் முக்கிய அமைச்சுக்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான முக்கியமான 37 கடிதக் கோவைகள் தற்போது ஜனாதிபதியிடம் உள்ளன.

இந்த முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த முறைகேடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பிதுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# பிக்குகளின் தொடர் போராட்டங்களால் இன, மத மோதல் வெடிக்கும் அபாயம்

## எச்சரிக்கிறார் சரத் அமுனுகம

கொழும்பு —



தென்னிலங்கையில் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துகின்ற பௌத்த பிக்குகள்- யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்குத் தைரியம் இருக்கிறதா? என்று நிதி அமைச்சர் சரத் அமுனுகம கேள்வியெழுப்பியுள்ளார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கை மிகச் சிறிய நாடு . ஜே.ஆர்- இந்திய உடன்பாடு ஏற்பட்டபோது இலங்கையில் இந்தியத் தலையீடு அதிகம் இருந்தது. அப்போது இந்த ஜாதிக ஹெல உறுமய எங்கே போனது? அவர்கள் நாட்டுக்கு இம்மியளவும் சேவையாற்றுகிறவர்கள் அல்ல.

அத்துரலிய ரத்ன தேரரின் நடவடிக்கைகளுக்காக அவருக்கு 'சரசவிய' விருது தான் கொடுக்கப்பட வேண்டும்.

பெருமளவிலான நிதி உதவியை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நாடுகள் அளித்துள்ளன. இதனால் அகலக் கண்கொண்டு அந்த நாடுகள் இலங்கையை அவதானித்து வருகின்றன.




ஒருவேளை இலங்கைக்குள் பன்னாட்டுப் படை நுழைந்தால், பிடிவாதம் கொண்ட இந்த இடதுசாரிகள் அந்தப் படையை எதிர்கொண்டு போராடுவார்களா?

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கிணறுகள், பள்ளிக்கூடங்கள், வீதிகள் சீரமைத்துக் கொடுப்பதை நாம் எதிர்த்தால் அவர்கள் அரசு மீது எப்படி நம்பிக்கை கொள்வார்கள்?

கொழும்பில் ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்துகிற பௌத்த பிக்குகளே! உங்களுக்கு நாங்கள் முழுமையான பாதுகாப்பு அளிக்கிறோம் .

உங்களுக்குத் துணிவிருந்தால் யாழ்ப்பாணத்தில் போய் இந்த உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துங்கள். இவர்கள் அனுராதபுரத்தைத் தாண்டிச் செல்ல அச்சப்படுபவர்கள்.


பொதுக்கட்டமைப்பு என்பது கடற்கரையிலிருந்து 2 கிலோமீற்றர் பகுதியில் மேற்கொள்ளப்படுகிற மீளமைப்பு நடவடிக்கையே. ஆளும் மக்கள் ஐக்கிய முன்னணி அரசு குறித்து எவரும் அச்சப்படத் தேவையில்லை.

பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவும், அதைச் செயற்படுத்தவும் அனைத்து நடவடிக்கைகளையும் எமது அரசு மேற்கொண்டு வருகிறது. எமது ஆட்சிக் காலத்தில் 40 ஆயிரம் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கிறோம். கடந்த ஆட்சிக்காலங்களில் அவர்கள் வேலைவாய்ப்பு கேட்டபோது சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பௌத்த பிக்குகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டால், சர்வதேச நிதி உதவி நமக்குக் கிடைக்காது. அத்துடன் நாட்டில் மத , இன மோதல்கள் பாரிய அளவில் வெடிக்கும் என்றும் சரத் அமுனுகம எச்சரித்தார்.

# அரசாங்கத்தைப் பொறுப்பேற்க எதிர்க்கட்சித் தலைவர் இணக்கம்!

கொழும்பு —



பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுவது தொடர்பாக எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் அரசாங்கத்தை எதிர்க்கட்சி பொறுப்பேற்குமாறு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

ஜனாதிபதி சந்திரிகா, கடந்த செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களில் ஜனாதிபதி மாளிகையில் நடத்திய இரகசியப் பேச்சுவார்த்தையின்போது இந்த ஆட்சிமாற்றம் தொடர்பான தனது விருப்பத்தை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில், பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் அரசாங்கத்தைக் கவிழவிடாமல் ஐ.தே.க. பாதுகாக்கும் என ரணில் தெரிவித்தார். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை தான் எதிர்பார்ப்பதாகவும், அதனை உரியகாலத்தில் நடத்துமாறும், அரசினை இன்னும் ஒரு வருடத்துக்கு ஆட்சி நடத்த ஐ.தே.கட்சி ஆதரவு வழங்குமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், ரணிலின் இந்த ஆலோசனைக்கு ஜனாதிபதி தனது விருப் பத்தை வெளிப்படுத்தாமல், எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் ஆட்சியைப் பொறுப்பேற்குமாறு ரணிலைக் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு ரணில் அமைக்கும் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அளிப்பதாகவும் ஜனாதிபதி உறுதி வூழங்கினார்.

அர்சாங்கத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டால், ஜனாதிபதித் தேர்தலைத் தவிர, இடையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல், ஐந்து வரு டங்களுக்கு அரசாங்கத்தை நடத்திச்செல்ல இடமளிக்க வேண்டுமென இறுதியில் ரணில் தனது ஆலோசனையைத் தெரிவித்தார்.

இந்த ஆலோ சனைக்கு உடன்பட்ட சந்திரிகா, ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஒத்துக்கொண்டதால் அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (தே)

## முல்லைத்தீவில் கடற்புலிகளின் படகு நடமாட்டம்

கொழும்பு —

முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் இரண்டு அதிவேக தாக்குதல் படகுகள் நடமாடியதை கடற்படையினர் அவதானித்ததாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இந்த அதிவேக தாக்குதல் படகுகள் 35-40 கடல்மைல் வேகத்தில் நடமாடியதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# கூட்டணிக்குள் மீண்டும் ஜே.வி.பியை இழுப்பதற்கு பிரதமர் மஹிந்த முயற்சி

## நாளை சந்திப்புக்கு அழைப்பு

கொழும்பு —



அரசாங்கத்தை விட்டு வெளியேறிய ஜே.வி.பியை மீண்டும் கூட்டமைப்புக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - நாளை ஜே.வி.பி. தலைவர்களை பேச்சு நடத்தவருமாறு அழைப்பு விடுத் துள்ளார்.

கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோருடன் அலரிமாளிகையில் நடத்திய மூன்று மணி நேர சந்திப்பை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் ஜே.வி.பியினருக்கு இந்த அழைப்பை விடுத்தார். ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோருக்கே தொலைபேசி மூலம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

மேற்படி அலரிமாளிகை சந்திப்பில் ஜே.வி.பியினரை மீண்டும் கூட்டணிக்குள் கொண்டுவரும்படி பிரதமருக்கு வினயமாக வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஆளும் கூட்டணி யில் அங்கம் வகிக்கும் கட்சித் தலை வர்களான டக்ளஸ் தேவானந்தா, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் உட்பட சில சிரேஷ்ட அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா இன்று அமைச்சரவை மறுசீரமைப்பு அறிவித்தலை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜே.வி.பியினரால் இராஜினாமாச் செய்யப்பட்ட அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுக்கள் ஆகியவை, தெரிவுசெய்யப்பட்ட ஏனைய ஆளும் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

இதுதொடர்பாக இன்று ஜனாதிபதி தனது முடிவுகளை அறிவிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை - பொதுக்கட்டமைப்புக் குறித்து ஆலோசனை நடத்த ஜனாதிபதி இன்று ஆளும் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களைச் சந்திக்க விருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் இல்லை!

## கண்டி கூட்டத்தில் சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடத்தப்படமாட்டாதெனவும் - இந்தத் தேர்தல் அடுத்த வருடமே நடத்தப்படுமெனவும் ஜனாதிபதி முதன் முறையாக பொதுமக்கள் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தனது உரையில்-

ஜனாதிபதித் தேர்தல் இன்னமும் ஒரு வருடமும், நான்கு மாதத்தின் பின்னரே நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடம் டிசம்பர் மாதம் நடத்த வேண்டுமென ஐ.தே.கட்சியினர் கோரிவரும் நிலையில், அவர்களுக்கு தெளிவான பதிலை ஜனாதிபதி கண்டியில் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக் காலத்திற்கான சத்தியப் பிரமாணத்தை 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் செய்திருந்தார். ஆனால் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மீண்டுமொரு முறை இரகசியமான முறையில் சத்தியப்பிரமாணத்தைச் செய்துள்ளார்.

இவரின் இரண்டாவது சத்தியப்பிரமாணத்தின்படி அடுத்த வருடம் நவம்பர் மாதமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

எனினும், இந்த வருடம் டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கோரி, அடுத்த மாதத்திலிருந்து மக்கள் சக்தி போராட்டத்தை ஐ.தே.கட்சி நடத்தவுள்ளது.




இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடக்குமென்று கூற தேர்தல் ஆணையாளர் திஸநாயக்க மறுத்துவிட்டார். ஜனாதிபதித் தேர்தல் குறித்து நான் எவ்வித கருத்தையும் தெரிவிக்கமாட்டேன் என அவர் தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி குறித்த முடிவை தேர்தல் ஆணையாளரே எடுக்க வேண்டுமென அரசியல் யாப்பு சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், இரண்டாவது பதவிக் காலத்திற்காக சத்தியப்பிரமாணத்தை எடுத்திருந்தார். எனவே ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் டிசம்பர் மாதமே நடத்தப்படவேண்டும். தேர்தல் ஆணையாளர் சுதந்திரமான அலுவலர். எனவே, ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத்துவது என்பது குறித்து அவரே உறுதியான முடிவை எடுக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# நட்வெஸ்ட் முக்கோண கிரிக்கெட் தொடரில் அவுஸ்ரேலிய அணிக்கு 2ஆவது தோல்வி!



லண்டன் —

லண்டனில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நட்வெஸ்ட் முக்கோணத் தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில், உலக சம்பியனான அவுஸ்ரேலிய அணி, இங்கிலாந்திடம் 3 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

பிறிஸ்ரல் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி கில்கிறிஸ்ட், ஹைடன் ஜோடி தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கியது. இவர்கள் இருவரும் ஓட்டங்களை நிதானமாகப் பெற்ற போதிலும், இங்கிலாந்தின் ஹர்மிசன் இவர்களை விட்டுவைக்கவில்லை. இதில் முதலில் கில்கிறிஸ்ட் 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும், அடுத்து பொண்டிங், மார்ட்டின் இருவரும் ஓட்டமெதையும் பெறாமலும் ஹர்மிசனின் பந்தில் வெளியேறினர்.

இதன்பின்னர் ஹைடனுடன் கிளார்க் இணைந்தார். எனினும் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்



அடித்து 31 ஓட்டங்களுடன் இருந்த ஹைடனையும் ஹர்மிசன் வெளியேற்றினார். இதன்பின் கிளார்க்கும், அவருடன் இணைந்த மைக்கல் ஹசேயும் அணியை ஒருவாறு மீட்டனர். இவர்கள் இருவரும் 5ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 105 ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த நிலையில் கிளார்க் 45 ஓட்டங்கள் பெற்ற நிலையில் லெவிஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஹசேயுடன், வற்சன் இணைந்தார். எனினும் 11 பவுண்டரிகளுடன் 84 ஓட்டங்களைப் பெற்ற ஹசே, ஹர்மிசனின் பந்தில் வெளியேறினார். இந்த விக்கெட் மூலம் ஹர்மிசன் முதன் முறையாக 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதனையடுத்து வற்சன் 25, ஹொக் ஆட்டமிழக்காமல் 10, ஜிலெஸ்பி 14, கஸ்பரோவிச் 1, மக்ரா ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காமலும் இருந்தார். இறுதியாக அவுஸ்ரேலிய அணி நிர்ணயிக்கப்



பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 252 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஹர்மிசன் 5, பிளின்ரொப் 2, டரன் கோ, லெவிஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின் 253 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி மக்ராவின் பந்துவீச்சில்




திணறியது. இவரது வேகத்தில் ட்ரெஸ்கொதிக் 16, ஸ்ரரஸ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதன்பின் அணித்தலைவர் வோகன் நிலைத்து நின்றபோதிலும், கொலிங்வூட் 14, பிளின்ரொப் 19 ஓட்டங்களுடன் மறு



முனையில் ஆட்டமிழந்தனர்.

எனினும் வோகனுடன் இணைந்த பீற்றர்சன் தனது அதிரடி ஆட்டத்தால் அவுஸ்ரேலிய அணியை நிலைகுலையச் செய்தார். இவரது ஆட்டத்தில் அனல் பறந்தது. இந்த நிலையில் சிறப்பாக ஆடிய வோகன் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் வந்த ஜோன்ஸ் 2, சோலங்கி 13 ஓட்டங்களு



டன் ஆட்டமிழந்தனர். எனினும் லெவிஸ் 7 ஓட்டங்களுடனும், பீற்றர்சன் 65 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 91 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இறுதியில் 47.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலிய அணியை இங்கிலாந்து தோற்கடித்தது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பீற்றர்சன் தெரிவானார்.

அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களில் மக்ரா 2, ஹொக் 3, கஸ்பரோவிச் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டு போட்டிகள் முடிவடைந்தநிலையில் இங்கிலாந்து 11 புள்ளிகளுடன் முதலிடத்திலும், பங்களாதேஷ் இரண்டாமிடத்திலும், அவுஸ்ரேலியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

## ரஷ்ய வீராங்கனை முதலிடம்!




இத்தாலியில் நடைபெற்ற ஐரோப்பிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை லிலியா சுபுகோவா முதலிடத்தைப் பெற்றார்.

## சர்வதேச தரவரிசையில் பிறேஸில் முதலிடத்தில்!

முனிச் —

சர்வதேச உதைபந்தாட்ட அணிகளின் தரவரிசைப் பட்டியலில் பிறேஸில் தொடர்ந்து முதலிடத்தை வகிக்கிறது. செக். குடியரசு 2ஆவது இடமும், அவுஸ்ரேலியா 3ஆவது இடமும், ஹொலன்ட் 4ஆவது இடமும், பிரான்ஸ் 5ஆவது இடமும், மெக்சிக்கோ 6ஆவது இடமும், இங்கிலாந்து 7ஆவது இடமும், போர்த்துக்கல் 8ஆவது இடமும், ஸ்பெயின் 9ஆவது இடமும், அமெரிக்கா 10ஆவது இடமும், இத்தாலி 11ஆவது இடமும், சுவீடன் 12ஆவது இடமும், கிறீஸ் 13ஆவது இடமும், துருக்கி 14ஆவது இடமும், அயர்லாந்து 15ஆவது இடமும், டென்மார்க் 16ஆவது இடமும், ஈரான் 17ஆவது இடமும், ஜப்பான் 18ஆவது இடமும், உருகுவே 19ஆவது இடமும், தென்கொரியா 20ஆவது இடமும் வகிக்கின்றன.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் ஜேர்மனி 21ஆவது இடத்தில் உள்ளது.

# விளையாட்டு

## கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியனானார்!



லண்டன் —

லண்டனில் நடைபெற்ற ஈஸ்ட்போன் பெண்கள் சம்பியன்ஷிப் ரெனிஸ் போட்டியில் - பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் - தன்னை எதிர்த்து விளையாடிய ரஷ்யாவின் விரடச் செவினாவை வென்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

## கொன்பெடரேசன் கிண்ண உதைபந்தாட்டம் ஆஜென்ரீன, ஜேர்மனி அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி!





பிராங்போர்ட் —

கொன்பெடரேசன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் ஜேர்மனி மற்றும் ஆஜென்ரீன அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கான தகுதியைப் பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏ பிரிவுக்கான ஆட்டத்தில் 3-0 என்ற கோல் கணக்கில் ஆபிரிக்க சம்பியனான டுனீஷியாவைத் தோற்கடித்தது ஜேர்மனி.

மைக்கல் பல்லாக், பாஸ்டியன் ஸ்வென்ஸ்டிகர், மைக் ஹேன்கே ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து ஜேர்மனியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியை 4-2 என்ற கோல் கணக்கில் ஆஜென்ரீனா தோற்கடித்தது.

லூசியானா பிகேரோ 3 கோல்களையும், ஜுவன் ரிகுலெம் (பெனால்டி) ஒரு கோலையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

தோல்வியுற்ற அவுஸ்ரேலிய அணியில் ஜோன் அலோய்ஸி 2 கோல்களையும் அடித்தார்.

இந்த வெற்றிகளை அடுத்து, ஆஜென்ரீனா, ஜேர்மனி அணிகள் தலா 6 புள்ளிகளுடன் ஏ பிரிவில் முன்னிலை பெற்றுள்ளன. இவ்விரு அணிகளிடையிலான ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நுரெம்பர்கில் நடைபெறவுள்ளது.

வெற்றிபெறும் அணி, பி பிரிவில் வலுவானதாகத் திகழும் பிறேசிலை அரையிறுதியில் சந்திக்கத் தேவையிருக்காது. அதனால் இவ்விரு அணிகளிடையேயான ஆட்டம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒருவேளை ஆட்டம் சமநிலையில் முடிந்தால் கோல் சராசரியின்படி ஜேர்மனி முதலிடத்தைப் பிடிக்கும்.

## அன்ட்ரூ சைமன்ஸுக்கு அபராதம் விதிக்கப்பட்டது!



பிறிஸ்டல் —

அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் சைமன்ஸுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் நம்பிக்கையான வீரர்களில் ஒருவர் சைமன்ஸ், சமீபத்தில் இவர் தனது நண்பரின் பிறந்த நாள் விழாவையொட்டி நடந்த விருந்தில் கலந்துகொள்ள ஹோட்டலைவிட்டு வெளியே சென்றார். மறுநாள் காலையில் 5 மணிக்குத்தான் ஹோட்டலுக்குத் திரும்பினார்.

இது அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி விதிமுறையை மீறிய ஒழுங்கீனமான செயல் என்பதால், சைமன்ஸுக்கு தண்டனையாக 6 ஆயிரம் டொலர் அபராதமும், 2 போட்டிகளில் விளையாடத் தடையும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையால் விதிக்கப்பட்டுள்ளது.

## கே.சி.சி.சி. கிண்ண கிரிக்கெட் போட்டி!

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டி இவ்வாண்டும் நடத்தப்படவுள்ளது.

போட்டிகள் யாவும் லீக் முறையில் நடைபெறுமென்றும், இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 23 ஆம் திகதி எனவும், 02-07-2005 தொடக்கம் போட்டிகள் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆண்ட பரம்பரையின் அவல வாழ்வை தொடர்ந்து நாம் அனுமதிக்க முடியாது!

## பேரெழுச்சி நிகழ்வில் சிவாஜிலிங்கம்



யாழ்ப்பாணம் —

பல நூற்றாண்டுகளாக தனித் தமிழ் ஆட்சி நடைபெற்ற இந்த நாட்டில்- இன்று மிகச் சாதாரண மனிதாபிமான பொதுக்கட்டமைப்பைக் கூட தமிழரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்களால் எமக்கு எந்த வகையில் தீர்வு கிடைக்கப்போகிறது? இவ்வாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியத்தின் குரல் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் -

பல நூற்றாண்டுகளாகத் தனித் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது எமது நாடு. ஆங்கிலேயரினாலும், ஒல்லாந்தரினாலும், போர்த்துக்கேயராலும் எமது நாடு ஆக்கிரமிக்கப்பட்டதே தவிர - எந்தக் காலத்திலும் சிங்களவர்களிடம் நாம் தோற்ற வரலாறு கிடையாது.

அந்நிய நாட்டவரிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட காலத்திலிருந்து, எமது மொழி இரண்டாம் தர மொழியாகவே நோக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் எம்மவர்களால் அகிம்சை வழியில் மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டங்கள் எல்லாம், பேரினவாதிகளால் அடக்கி ஒடுக்கப்பட்டே வந்தன. இந்நிலையிலேயே 1976 இல் வட்டுக்கோட்டையில் தனித் தமிழீழப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு முழுமையான ஆதரவினை 1977இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன் பின்னரும் அகிம்சை ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள், பேரினவாதிகளால் ஒடுக்கப்பட்டு தமிழர்கள் மீது போர்த் திணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையிலேயே ஆயுதப் போராட்டம் மீண்டும் வலுவடைந்தது.

அதன் பின்னர் 2002ஆம் ஆண்டு சரியான படைச் சமநிலையுடன் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது என்று தெரிவித்த சிவாஜிலிங்கம்,

போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு 3 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையிலும், எந்த விதமான தீர்வும் எட்டப்படவில்லை. மீண்டும் மீண்டும் தமிழ் மக்களைச் சீண்டும் வகையிலான செயற்பாடுகளையே அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. பேரினவாதிகளால் மிகச் சாதாரண மனிதாபிமான பொதுக்கட்டமைப்பைக் கூட ஏற்க முடியவில்லை.

இந்நிலையில் இவர்களால் எமக்கு எந்த வகையில் தீர்வு கிடைக்கப்போகிறது என்று கேள்வி எழுப்பிய அவர், எனவே எமது சுயபலத்தில் எமது உரிமைகளை நாமே வென்றெடுப்போம் - என்று வலியுறுத்தித் தெரிவித்தார்.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள விவசாய சம்மேளனங்கள் - கடந்த ஐந்து வருடங்களின் பின்னர் மீண்டும் புதிய நிர்வாக தெரிவு மேற்கொள்ளப்பட்டு, கடந்த வாரம் முதல் செயற்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு கிழக்கு சம்மேளனத்தின் தலைவராக எஸ்.சச்சிதானந்தன், செயலாளராக வி.கீதா, நெடுந்தீவு மத்தி தலைவர் எஸ்.அடைக்கலமுத்து, செயலாளர் எம்.ஜோசெப், நெடுந்தீவு தெற்கு தலைவர் எஸ்.யோகநாதன், செயலாளர் பி.கௌரி, நெடுந்தீவு மேற்கு தலைவர் ஆர்.முத்துலிங்கம், செயலாளர் என்.சசிகுமார் ஆகியோரே தற்போதைய விவசாய சம்மேளன புதிய நிர்வாகத்தினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(113)

# வீடுகள் அமைப்பதற்கு வழங்கும் நிதியை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்!

## அரச அதிபர் கே.கணேஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

உலக வங்கியால் வீடமைப்புக்கென வழங்கப்பட்ட நிதியை, வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தாது முற்றுமுழுதாக வீடமைப்புக்கே பயன்படுத்தி தமக்கான வீட்டை மக்கள் அமைத்துக்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ், யாழ். மாவட்டத்தில் யுத்தத்தால் வீடுகளை இழந்தோருக்கு மீண்டும் வீடுகளை அமைக்கும் நோக்கில், அவர்களுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவு வழங்கும் வைபவம் அண்மையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது. அதில் தலைமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

யாழ். மாவட்டத்தில் 50 ஆயிரம் வீடுகள் கட்டவேண்டிய தேவை இன்று உள்ளது. வீடமைப்புக் கொடுப்பனவு பெறும் மக்கள் அதை முற்று முழுதாக வீடமைப்புக்கே பயன்படுத்தி -



இந்தத் திட்டம் வெற்றி பெறும் பட்சத்தில், வேறு நிறுவனங்கள் பலவும் நிதியுதவி அளிக்கும். அதன் மூலம் யாழ். மாவட்டத்தில் கட்டப்பட வேண்டிய ஏனைய வீடுகளையும் கட்டி முடிக்கலாம்.

மேலும், சுனாமியால் யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்து 400 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளை அமைக்கும் பொறுப்பும் எமக்கே வழங்கப்பட்டுள்ளன. இதற்கென மாவட்ட மட்டத்தில் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ்.மாவட்டத்தில் மீள வீடமைக்கும் பணிக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டது

ஆழியவளை —

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் இடைநிலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் தரம் 12,13 ஆம் வகுப்பின் கல்விக்காக வழங்கப்படும் புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு முதல் தடவையாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி, சித்தியடைந்து 2005 ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

மாணவர்களின் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, கல்வித் தரம், இணைப் பாடவிதான செயற்பாடுகள், பாடசாலையின் தரம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

(122)





யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தடுப்பது மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பது தொடர்பாக நேற்று பிள்ளையார் இன் விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட வடபிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தனியார் மினிபஸ் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளைப் படங்களில் காணலாம்.

## புனர்வாழ்வு நிறுவனத்தின் கடன் வழங்கும் திட்டம்!

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனது திட்டங்களில் ஒன்றான பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தை தென்மராட்சி பிரதேச கிராமங்களை உள்ளடக்கியதாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த வகையில் பெண்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, கடன் வழங்கும் திட்டத்தை செயற்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில் கைதடி மேற்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்க பயனாளிகள் 8 பேருக்கு சுயதொழில் அடிப்படையில் கடன் தொகை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆர்.சுஜித்தா (திட்ட உத்தியோகத்தர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்) கைதடி மேற்கு கிராம சேவையாளர் சு.செல்வராசா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வெளியிணைப்பு இயந்திரங்கள் கெயர் நிறுவனத்தால் திருத்தம்

பருத்தித்துறை —

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த வெளியிணைப்பு இயந்திரங்களை கெயர் அமைப்பினர் உரியவர்களிடம் வழங்கி வருகின்றனர்.

இதுவரை வடமராட்சிப் பகுதியில் 150 வெளியிணைப்பு இயந்திரங்கள் திருத்தி ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 400 இயந்திரங்கள் திருத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு இயந்திரங்களுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வரை செலவுசெய்யப்படுகின்றன என்று அங்கு பணிபுரியும் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் திருத்தி வழங்கப்படும் வெளியிணைப்பு இயந்திரங்கள் - ஒரு வருடத்துக்குள் பிழைகள் ஏற்படின், அவற்றையும் தமது அமைப்பின் செலவில் செய்துகொடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

(20)

# நியாப் அபிவிருத்தித் திட்டம் குறித்து சங்குவேலியில் கலந்துரையாடல்!

உடுவில் —

சங்குவேலி J/187 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசம், நியாப் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கடந்தவாரம் சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இதற்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சங்குவேலி மத்தியில் கலாசார மண்டபம் அமைத்தல், வீதிகள், குளங்கள், பொதுக்கிணறுகள் அபிவிருத்தி செய்தல் போன்ற திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றிற்கென மொத்தம் 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னர் செயற்பட்டு வந்த மாதர் முன்னேற்றச் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம் என்பனவும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதன் தலைவராக திருமதி. இரவீந்திரன் மணிமேகலை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு சுழற்சி முறைக்கடன் வழங்கப்படவுள்ளது. இதற்கென 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(101)



# நயினை ஸ்ரீ நா...

# அம்மன் அ...

# தேர்த்தி...

## அம்பிகையின் ...

ஆதி, அந்தமற்றது. சைவமதம். அதேபோன்று எக்காலத்தில் தோன்றியது என்று யாராலும் ஆராய்ந்தறிய முடியாத சுயம்ப மூர்த்தமாக நயினாதீவில் எழுந்தருளி அருள்பாலிப்பவள் தான் நயினை நாகபூஷணியும், பின்னே காட்சி தரும் நாகமும் ஆகும். நினைப்பவர் மனதில் அருள்பாய வைக்கும் அற்புதமான அருள் அம்பிகையாக அருள் பாலிக்கும் நயினைத்தாயின் அருள் திறனை, பேரருளை விபரிக்க சொல்லால், எழுத்தால் முடியாது. அம்பாள், ஆச்சி என்று சொல்பவர் முன் அருள் தெய்வமாக அருளிலே நினைக்க வைக்கும் அருளாரமுதாக அருள் சுரந்து நிற்பாள்.

## தெய்வீக நம்பிக்கை மதவாதத்திற்கு அப்பாற்பட்டது; வெளிப்படுத்திய நயினை நாகபூஷணியின் திருவருள்:

அவளின் அருள் அலையில் அள்ளுண்ட அடியவர்கள் அனுபவ உண்மையாக உணர்வார்கள். நயினை நாகம்மாளின் தெய்வீக சக்தியின், அருள் சக்தியின் வெளிப்பாட்டை அண்மையில் அகிலத்தை அதாவது சர்வதேசத்தை வியப்பில் ஆழ்த்திய நிகழ்வு நம்மை தெய்வீக பரவச நிலைக்கு இட்டுச் சென்றது.

மரணத்தின் விளிம்பிலிருந்து மீண்ட டினேஸ் தர்மேந்திராவின் மனைவி டொரீன்ரீட்டா புவிஞன்ஸி கிறிஸ்தவப்பெண் சொன்ன வார்த்தைகள் சர்வதேசத்தை நயினைத் தாயின் பால் திரும்ப வைத்தது. ஈராக்கிலுள்ள சுனி முஸ்லீம் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்ட தர்மேந்திரா –மரணத்தின் விளிம்பில் இருக்கின்றார் என்பதை சர்வதேசமும் உணர்ந்து, அவரின் குடும்பம் மீது கருணையும், அனுதாபமும் கொண்டது. அனைத்து ஊடகங்களும் அவர் விடுதலை சம்பந்தமான செய்திகளை ஐயப்பாட்டுடன் வெளியிட்டன. அவர் தீவிரவாதிகளினால் விடுதலை செய்யப் படுவாரா? அல்லது கொல்லப்படுவாரா? என் [illegible] கேள்வி சர்வதேசமட்டத்தில் கேள்விக் குறியாக நின்றது. இலங்கை அரசும், அமைச்சர்களும் மற்றும் அனைத்து மக்களும தர்மேந்திரா விடுதலை பற்றி ஒரு முடிவைச் சொல்ல முடியாத நிலையில் திகைத்து நின்றனர். சர்வதேசம் அவரின் விடுதலையை உன்னிப்பாக உற்று நோக்கியது. அக்கால கட்டத்தில் அவரைக் கட [illegible] தீவி[illegible]ாதிகள் அவரை விடுதலை செய்தனர். அவர் வீட்டிற்கு வந்ததும் பத்திரிகையாளர்கள் அவரைச் சூழ்ந்து கொ[illegible] கைது பற்றியும், அவர் மரணத்தின் விளிம்பில் இருந்து மீண்ட விபரங்களையும் பத்திரிகைகள் மூலம் வெளியிட்டனர்.

பத்திரிகையாளர்கள் அவரின் மனைவி டொரீன் ரீட்டா புவிஞன்ஸிடம் கணவர் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை இருந்ததா? எனக் கேட்டபோது, என்னுடைய குலதெய்வம் நயினை நாகபூஷணியம்மாள் அவளுடன் சண்டையிட்டேன், துடிதுடித்தேன் என் தாலிக்கொடியிலும் அவளையே பொறித்திருக்கிறேன். அவள் என்னைக் கைவிடவில்லை என்று கண்ணீர் மல்கக் கூறிய செய்திகள் ஊடகங்கள் வாயிலாக, பத்திரிகைகள் மூலமாக வெளிவந்தன. ஒரு கிறிஸ்தவ குடும்பம், கிறிஸ்தவ பெண் நயினைத் தாயின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தாள். அதாவது வேண்டுதல் வழிபாட்டைவிட, உரிமையோடு சண்டை பிடித்துள்ளாள். சண்டையிட்டேன் என்ற வார்த்தை மனதால் வந்தித்து உள்ளத்தால், தெய்வத்தோடு பேசுகின்ற நிலை உன்னைத்தவிர, மீட்டுத்தர வேறுயாரும் இல்லை என்ற நம்பிக்கையின் வெளிப்பாடு தெய்வீக சக்தி, தெய்வ நம்பிக்கை மதத்திற்கு அப்பாற்பட்டது என்பதை ஒரு கிறிஸ்தவ பெண் மூலம் எம்பிராட்டி உணர்த்தினாள்.

மதவாதம் பேசுபவர்கள் குடிதனை நெருங்கி, பெருக்கமாய் இந்துக்கள் வாழ்ந்த கோணமாமலையாம் திருகோணமலையில் புத்தர்சிலையை வலுக்கட்டாயமாக வைத்திருக்கின்ற புத்தராய் சில புனை துகில் உடைய பௌத்த தேரர்களுக்கும், மதமாற்ற வேலைகளில் முனைந்து நிற்கின்ற மதவாதிகளுக்கும் டொரீன் ரீட்டாவின் தெய்வ நம்பிக்கை ஒரு எடுத்துக்காட்டாக அமையட்டும்.

நயினை.நா.கோபாலகிருஷ்ணன்.
தலைவர். சப்த தீவக திவ்ய ஜீவன சங்கம்.

'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து ..' என்பது மணிவாசகரின் தி...
என்பவற்றைத் தாய்மையில் நாம் தெளிவாகக் காண்கிறோம். ஒரு நாமம், ஓருவம் ஒ...
வடிவங்களில் நாம் வழிபாடு செய்கின்றோம். இப்பக்தி நெறிகளுள் மிக நெருக்கமாக உ...
நெறி தாயாகக் கருதி வழிபாடு செய்யும் நெறியேயாகும்.

*தடித்ததோர் மகனை தந்தையீண் டடித்தால்*
*தாயுடன் அணைப்பாள், என்பதும்*
*பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ*
*புகலிடம் பிறிது முண்டோ*

என்பதும் தாய்க்கேயுரியதான ஒரு தனித்துவமான அரவணைக்கு பண்...
சிவிகை ஏற்றுவித்த சிவனை நோக்கிப் பாடிய மணிவாசகர் தாய்க்குரியதானஇரக்கப் ப...
'அம்மை எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என்று தாயன்பை மி அழகாக...

அம்பிகை மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள். அதனாலே தான் திரிபுர என்றும்...
'பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே' என அபிராமிப்பட்டர்...
நின்று உலகைத் தோற்றுவித்துக் காத்து நிற்பவள் அவள்.

இத்தாயன்புமிக்க சக்தியின் அருட்பொலிவு பெற்ற இடங்களே சக்தி பீடங்களாக...
பீடங்கள் அறுபத்துநான்கு எனக் கூறுவர். மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியி...
நீலாயதாட்சியாகவும் உறையும் மாபெரும் சக்தியே புவனேஸ்வரி பீடமாகிய இநயினை...

இயற்கை எழில் மிகுந்த இடங்களே இறைவன் விரும்பி உறையுடங்கள்...
மலையடிவாரம் முதலான இடங்களே எழில் மிகுந்தவை. நயினை நாகபூணி அம்...
அமர்ந்து. நித்தமும் நாடிவரும் அடியார்களுக்கு நித்தியலெட்சுமியாகக் கேயில் கொ...
எழுந்தருளி இருக்கின்றாள். தலத்தைச் சூழ்ந்துள்ள விருட்சங்களிலிருந்து ஸமூர்த்...
இங்கே வேப்பமரங்கள். தோப்பாகச் சூழ்ந்து எழிலுற வளர்ந்து நின்று இலையின் இ...
நிற்கின்றன. பத்தினித் தெய்வத்திற்குரிய மரம் வேப்பமரமாகப் பரவலாக எல்லோரா...

நாகபூஷணி அம்மன் ஆலயக் கருவறையிற் கல்லினாலான ஐந்து தல நாக உ...
உள்ளது. ஆராய்ச்சியாளர் நோக்கிற்கு இந்நாகம் மிகமிகத் தொன்மையாது. இத...
ஆராய்ச்சியாளர்- இதன் தொன்மையை வியந்து கூறினார். நாகவழிபா தொன்...
பிரானாகப் பல இடங்களில் இவ்வழிபாடு நடைபெறுகின்றது. சர்ப்பம் சக்தின் சின்ன...
நாக வடிவிற் சென்று அன்பர்களுக்கு அருள்புரிந்ததாகக் கர்ணபரம்பரைக் கதைகள் பல...

அம்பிகை குண்டலினி சக்தியாகவும்,அருட்சக்தியாகவும். சுயம்பு மூர்த்தமாகவும் எ...
மூலாதாரத்தில் உறங்கிக்கிடக்கும் குண்டலினி சக்தியை விளிப்புறச் செய்தவனே மகா...
ரீதியில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்துள்ளார்கள். இராமபிரான் துகையைப்...
கார்த்தியாயி னியை வழிபட்டதாகவும். ஆதிசங்கரர் சாரதையைப் பூசித்ததும் வரலா...
காளியைப் பூசித்துப்பெரும்பேறு பெற்றது போலவே. அபிராமிப்பட்டரும் சக்தி பாட்டாற்...

அவளின் தெய்வீகத் திருவுருவை மனதில் நிறுத்தி 'தஞ்சமென அடைந்தே தாயே உ...
ரட்சிப்பாய் கெஞ்சுகின்றேன் அம்மா' என்று கூறி அவளையே தஞ்சமாகக் கொண்டு மன...
கண்ணீர் மல்கி நிற்பவர்களுக்கு நல்லனவெல்லாம் தந்து ரட்சிக்கும் தகுதி அருக்கு உ...
தன்னை நாடி வரும் பக்த கோடிகளுக்கு அஞ்சேல் என்று அபயக்கரம் காட்டிஅரவணைப்...
ளின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்று. கருணை பாலிக்கும் தெய்வம் ஈற பெரு...
அம்பாளுக்கு உண்டு. இங்கு நடைபெறும் நித்திய. நைமித்திய பூசை வழிகளால் அ...
பொன்னையும். புகழையும். போகத்தையும் அள்ளி அள்ளிச் சொரிகின்றாள் அமுத சுரபிய...
வருகைதரும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கி. உபசரித்து ஆறுதலளிகிறாள்.

இறைவனைத் தாயாகவும். உலக நாயகியாகவும்போற்றி வணங்குமரபு. நமது...
தெய்வத்தைப் பெண்ணாகவும். பெண்ணைத் தெய்வமாகவும் போற்றிய உ பண்பு கை...
தாயிடம் எத்தகைய நெருக்கத்தை உணருமோ. அத்தகைய நெருக்கத்தை இறைவ...
ஜீவராசிகளுக்கும் தாயன்பைச் சுரந்து அருள்பாலித்துக் கொண்டிருக் தெய்வீக...
இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காதவளாக்கி. அந்த அருட்சக்தியின் தனிப்பெ புகழை வி...
நன்றாக தமிழ் செய்யுமாறு என்னை நன்றாக இறைவன் படைத்தனன் என்பதை நி...
தீயாக. வழியுமாக. தேனாக. பாலாக சேர்ந்தினிக்கும் தேவியவள் பெருமையை வாய்...
தன்னை மறந்து தன் நாமம் கெட்டு. தலைவி தன் தாளிணைகள் தலைப் நிற்க வே...

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்...

அன்னை நாகா
பூட் சிற்றி
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 5515, 021 - 222 5223

பூபாலசிங்கம்
புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் அருகில்
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 6693

இ.ச.பேரம்பலம்
சக நிறுவனம்
50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 2988

ஸ்ரீ
401,
T

பிள்ளையார் அருள்
வண்ணச்சோலை
யாழ்சாலை, கிளிநொச்சி.
(C/3676)

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
கல்யாணப் பட்டுகளின் கைராசி நிறுவனம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(C/3677)

குமரகுரு
அழகுப்பொருள்
யாழ்சாலை, கி...



# ீ நாகபூஷணி
# மன் ஆலய
# திருவிழா சிறப்பிதழ்

## ின் மகத்துவம்

ன்பது மணிவாசகரின் திருவாசகம். அன்பு, பொறுமை, இரக்கம், மன்னிக்கும் சுபாவம்
. ஒரு நாமம், ஒருவம் ஒன்றுமில்லாத பரம்பொருளுக்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பல்வேறு
ளுள் மிக நெருக்கமாக உளங்கலந்து, உணர்வுபூர்வமான உறவை ஏற்படுத்தி வழிபட வாய்த்த

அரவணைக்கும் பண்பைத் தெளிவாக்கி நிற்கும் பாடலடிகளாகும். இதனாலேயே
தாய்க்குரியதான இரக்கப் பண்பை இறைவனிடம் கண்டு, இறைவனைத் தாயாக்கி
று தாயன்பை அழகாக எடுத்துக் கூறினார்.
லை தான் திரிபுர என்றும், மகா திரிபுரசுந்தரி என்றும் போற்றப்படுகின்றாள்.
வளே' என அபிராமிப்பட்டர் கூறியவாறு எல்லாவற்றிற்கும் 'மூல முதலாய்'

ங்களே சக்தி பீடங்களாகக் கருதப்படுகின்றன. உலகில் உள்ள சக்தி
னாட்சியாகவும், காஞ்சியில்காமாட்சியாகவும், நாகபட்டினத்தில்
ரி பீடமாகிய நயினையில் நாகபூஷணியாக உறைகின்றாள்.
ரும்பி உறைவிடங்கள். நதிக்கரை, கடற்கரை, சோலை,
நயினை நாகபூஷணி அம்பிகையும் நீலத்திரைக்கடல் ஓரத்தில்
சுமியாகக் கோயில் கொண்டு, நல்லருள்புரியும் வண்ணம்
ங்களிலிருந்து மூர்த்தியைஅறிந்து கொள்ளலாம் என்பர்.
ந்து நின்று இறைவியின் இருப்பிடம் இதுவென எடுத்துக் காட்டி
ப் பரவலாக எல்லோராலும் கருதப்படும் வழக்கம் உண்டு.
ான ஐந்து தலை நாக உருவமும், அதன் கீழ் ஒரு லிங்கமும்
தொன்மையானது. இதனை ஆராய்ந்த எம்.நரசிம்மன் என்ற
ர். நாகவழிபாடு தொன்மையானது. நாகபூஷணியாக, நாகதம்
. சர்ப்பம் சக்தி சின்னம் எனவும் கருதப்படுகின்றது. அம்பிகை
பரம்பரைக் கதைகள் பலவுள.
. சுயம்பு மூர்த்தமாகவும் எழுந்தளியுள்ளார். எமது உடம்பின்
ளிப்புறச் செய்தவர்களே மகான்கள் ஆவர். அவர்கள் ஆன்மீக
இராமபிரான் தேவியைப் பூசித்ததாகவும், கண்ணபிரான்
தேவியைப் பூசித்ததாகவும் வரலாறு உண்டு. இராமகிருஷ்ணர்
ிப்பட்டரும் சக்தி வழிபாட்டால் பேரின்பப்பேறு பெற்றார்.
மனை அடைந்தே தாயே உன் சேய் நான் ரஞ்சினியே
நெஞ்சமாகக் கொண்டு மனமுருகிக் காதலாகி கசிந்து
க்கும் தகுதி எமக்கு உண்டு. அலைகடல் தாண்டி
க்கரம் காட்டி அரவணைப்பவள் அவள். அடியார்க
க்கும் தெய்வம் ற பெருமை நயினை நாகபூஷணி
ிய பூசை வழிகளால் அம்பாள் பூரிப்படைகிறாள்.
சொரிகின்றாள் அமுத சுரபியாக நின்று தினந்தோறும்
ரித்து ஆறுதலளிக்கிறாள்.
போற்றி வணங்குவது மரபு. நமது சமயத்தின்சிறப்பம்சம்.
ும் போற்றிய பண்பு சைவத் தமிழ் மக்களுக்கு உரியது. ஒரு குழந்தையானது- தனது
கைய நெருக்கத்தை இறைவனிடமும் உணரவே தாயாக வழிபடுகின்றோம். அனைத்து
கொண்டிருக்கும் தெய்வீகத் தன்மை உடையவளாகிய அன்னை நாகபூஷணியை
சக்தியின் தனிப்பெரும் புகழை வியந்து பாடிப் பரவவேண்டும். பேசிப் புகழவேண்டும். 'தன்னை
படைத்தனன்' என்பதை நினைந்து நினைந்து வானாக, கடலாக, பூமியாக வளர்கின்ற
ியவள் பெருமையை வாய் ஓயாமல் பேசிப் புகழ்ந்து, அவளின் அருள் தேனை அருந்தி
னைகள் தலைப் நிற்க வேண்டும். இவ்வாறான பிரார்த்தனை ஒன்றிலேதான் உடலும்,



மனமும், உயிரும் இணைப்புக் கொண்டு மானிடம் அசைக்க முடியாத சக்தியைப் பெறுகின்றது. அதனால் துன்பமும், துயரமும் தொல்லைகளும் துரத்தப்படுகின்றன.

யாவராலும் மேலானதாகக் கருதப்பட்ட சக்தி வழிபாடு இன்றைய உலகில் மிக இன்றியமையாத வழிபாடாகவுள்ளது. சக்தியை மூன்று விதமாக வழிபடலாம். மந்திரஜெபம், ஸ்ரீசக்கரம், குண்டலினி யோகசாதனை. மந்திரங்கள் இறைவியின் ஒலிவடிவம், இதனால்தான் இறைவியை நாதரூபி, நாதாந்த சக்தி என அழைக்கின்றனர். இந்த மந்திரஜெபம் நயினை நாகபூஷணியம்மன் ஆலயத்தில் தினந்தோறும் முறையாக நடைபெறுகின்றது. நவராத்திரி தினங்களில் வேறு எந்தத் தலத்திலும் இல்லாத முறையில் இங்கு அம்பிகையானவள் மந்திரங்களால் துதிக்கப்பட்டுப் பிரார்த்திக்கப்படுகின்றாள்.

அடுத்ததாக- ஸ்ரீசக்கரம் தேவியின் வரிவடிவம் எனப்படுகிறது. ஒவ்வொரு பூரணைத்தினத்திலும் இந்த வரிவடிவம் வரையப்பட்ட தகடு வைக்கப்பட்டு, வில்வம் முதலியவற்றைச் சாத்தி விரிவானபூசை நடைபெறுகிறது.

குண்டலினி சக்தி புறத்தே நாகவழிபாடாக வழிபடப்படுகிறது. அம்பிகையின்வணக்கத்துக்குரிய மூன்று வழிபாட்டு முறைகளும் இங்கே நடைபெறுகின்றன. இது மிகவும் போற்றத்தக்க ஒன்றாகும்.

புவனங்கள் எல்லாம் கடந்து நிற்கின்ற எம்பெருமான் திருவுள்ளத்தில் அம்பிகையின் வடிவை அழகொழுகும்படி மெல்லமெல்ல எழுதி, முழுவடிவத்தையும் அங்கே உருவகித்து, அதையே தனது உள்ளத்திரையில் பார்த்த வண்ணம் தவமிருக்கின்றாள். அப்படி இருக்கும் போது அவனுள்ளத்தில் உயிருள்ள சித்திரமாக அம்பிகை நிற்கின்றாள். இறைவன் புறத்தோற்றத்தே எல்லாம் அடக்கிய யோகியாக இருந்தாலும், அம்பிகையை நினைத்த வண்ணம் இருப்பவன். இதனாலே தான் அம்பிகையைத் தன் ஒரு பாகத்தில் இறைவன் வைத்துக்கொண்டான் என்று சிவபக்தர்கள் சொல்வார்கள். அதனால் அப்பெருமானுக்கு அர்த்தநாரீஸ்வரர் என்ற திருநாமம் அமைந்தது. ஆனால் அம்பிகையின் பக்தர்கள் அப்படிச் சொல்லத் தயங்குவார்கள். அம்பிகையே அந்தப்பாகத்தை உரிமையோடுபெற்றுக்கொண்டாள் என்பார்கள். அருணகிரிநாதர் அம்பிகையே தன்வலப்புறத்தே இறைவனை ஏற்றுக் கொண்டுள்ளாள் என்பர். 'ஒருவரைப் பாங்கில் உடையாள்' என்ற அடி இதனை நன்கு புலப்படுத்தும்.

*'தியாகப் பொருப்பைத் திரிபுரந்தகனை*
*பாகத்தில் வைக்கும் பரமகல்யாணி'* எனக் கந்தரலங்காரம் கூறும்.

சிவபக்தர்கள் இறைவனின் அர்த்தநாரீஸ்வரரான தெய்வீகக் கோலத்தைக் கண்டபின், அம்பிகை பக்தர்களோ அர்த்தநாரீஸ்வரியாகக் கண்டார்கள் என்பது இங்கே புலப்பட்டு நிற்கின்றது.

அபிராமிப்பட்டரும் அப்படியே தான் காண்கின்றார். அம்பிகை இறைவனின் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டுஆட்சி நடத்துகின்றாளாம். அவனுடைய இடப்பாகத்தில்ஒரு பாதியை ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்சிசெலுத்தும் பராபரையாக இருக்கிறாளாம். இதனை அபிராமிப்பட்டர் கூறும் போது, சிவபெருமான் காமனை தன் கண்களால் அழித்தவன். தவவிரதம் பூண்டவன். அவனையே மயக்கி ஒரு பாகத்தில் குடிகொண்டு ஆட்சி நடத்துகின்றாளாம் அம்பிகை என்கின்றார்.

*'விழியால் மதனை அழிக்கும் தலைவர்*
*அழியா விரதத்தை அண்டமெல்லாம்*
*பழிக்கும் படி ஒரு பாகம் கொண்டாடும் பராபரையே'* என்பர். அப்படியாக உள்ளவள் தன்னுடைய அளவற்ற கருணையினால் தன் பக்தர்களுக்குத் தரிசனம் தருவாள். அன்பர்கள் விரும்பிச் செய்யும் பூசைக்குத் தரிசனம் கொடுப்பாளன்றோ.

பலவகையான கிரியா முறைகளை உடையது தேவி பூசை. அந்தக் கிரியைகள் எல்லாவற்றையும் ஏற்று, மனமகிழ்ந்து அவரவருக்கு அருட்காட்சி கொடுப்பாளன்றோ. இத்தகு தேவியின் தரிசனத்தைப்பெற்றவர் அபிராமிப்பட்டர்.

இப்பேரருளை நினைந்தே தன் இணையற்ற கருணையினால் அபிராமிப்பட்டருக்கு கண்ணுக்கும், கருத்துக்கும், வாக்குக்கும் எட்டாத தன் அழகுவடிவத்தை காட்டியருளினாள்.

'மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி, என்றன் விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்' என்று வியந்து பாடினார்.

இத்தகுபெருமையும், புதுமையும், வாய்ந்த அம்பிகையான புவனேஸ்வரி தானிருப்பதற்குத் தன் திருவருட்படியே மணித்துவீபம் என்ற அதிசய ஆனந்த புவனத்தைத் தேர்ந்தெடுத்தாள். கடலின் நடுவே பலவித இரத்தினங்கள் குவிந்து கிடக்கும் மணற்பரப்பில் இருக்கும் சிந்தாமணி பீடத்தில் கொலுவீற்றிருக்கின்றாள். இப்புவனேஸ்வரிதேவியை ஆராதிப்பவர்கள் யோகிகளாகவும், சித்தர்களாகவும், புகழ் பெற்றவர்களாகவும் விளங்குகின்றார்கள். புவனேஸ்வரியை உபாசித்ததன் பயனாய்ச் சகல சௌபாக்கியம் என்ற ஐஸ்வரியமும் கிட்டும். அவளைத் தினம் தியானித்துத் தொழுபவர்களுடைய வாழ்க்கை படிப்படியாக மேன்மை அடையும் என்பதற்கு நிறைந்த பல சாட்சியங்கள் உண்டு. அம்பிகையின் திருவருளின் பெருமை பற்றி உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வரும் ஆச்சரியம் மிகுந்த அடியார்களின் திருமுகங்களும், அவர்கள் நேரடியாகக் கூறும் செய்திகளும் நம்மை வியப்படையவும், மெய்சிலிர்க்கவும் வைப்பதாக இருக்கும். அத்தகைய மகோன்னதமான திருவருட் சக்தி கொண்டவள் அன்னை நாகபூஷணி.

இத்தகைய பெருமைக்கும், சிறப்புக்கும் உரியவளாகிய அன்னை ஸ்ரீநாகபூஷணியின் ஆலயத்தில் ஆண்டு தோறும் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுப் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் அலை அலையாகத் திரண்டு அன்னையின் அருள் பெற்றேக வந்து செல்வர். வழமைபோல் இவ்வருட மகோற்சவத்துக்கும் அடியார்கள் பெருந்தொகையாக வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அம்பிகையின் மஹோற்சவத்தை முன்னிட்டு வருகை தரும் அடியார்களுக்கு அனுக்கிரகம் வழங்கி, அவர்கள் எல்லோருக்கும் நிறைவான நல்வாழ்வு வழங்க வேண்டும் என்றும், அம்பிகையை நேரில் தரிசிக்க முடியாமல் தூரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் அடியார்களினது நல்வாழ்வு வேண்டியும், இடப்பெயர்வுகளினாலும், சூழ்நிலைகளாலும் அகதி வாழ்வென்ற அவல வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் வேண்டியும், அவர்களின் எதிர்கால சுபீட்சம் வேண்டியும் அம்பிகையைப் பிரார்த்திப்பதோடு, நாட்டிற் சாந்தியும், சமாதானமும் நிலவி, அன்பும் அருளும் தழைத்து, மனஅமைதியும், நிறைவும் கொண்ட சூழ்நிலை ஏற்படவேண்டுமென்று மனமுருகிப் பிரார்த்திப்போமாக.


ப்புற ாழ்த்துவோர்

ஸ்ரீ தாமோதர விலாஸ்
401, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 6867

எரிக்கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
இல.91,
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.
இல.80,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

S.D.S COmputer Services
125 A, Stanley Road, Jaffna.
T.P No: 021 - 4590686

குமகுரு புடவை
துப்ருள் வாணிபம்
யாழ்லை, கிளிநொச்சி.
(C/3678)

செந்தூரன் களஞ்சியம்
மின் உபகரணங்கள், நீர்க்குழாய்,
நீர்ப்பம்ப் விற்பனையாளர்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(C/3679)

சீமாட்டி புடவைக்கடல்
இல.122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுபட்டுப் புறப்படுவோம்

## வீரமுரசு நிகழ்வில் அரசண்ணா

கிளிநொச்சி

போராட்டமே வாழ்வாக அமைந்து, வாழ்வே போராட்ட வடிவமாக மாறி விட்டது என தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா தெரிவித்தார்.

பளை - முல்லையடி, வண்ணாங்கேணி ,தம்பகாமம் கிராம மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும், வீரமுரசு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணாங்கேணி வடக்கு வீரவேங்கை றொபேக்கா முன்பள்ளி மைதானத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களாகிய நாங்கள் இன்று இந்த உலகத்திலே எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருக்கிறோம். எண்ணிய கொள்கையில் மாறாத பற்றுக் கொண்டவர்கள் நாம். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பல போராட்டங்களை எங்கள் மீது மேற்கொண்டன. எனினும் ஒரு போதும் அவை வெற்றியளிக்காமல் போய்விட்டன. இந்த நிலைமையை ஏற்படுத்தியவர் கள் உங்களது மாவீரர்களே. இந்த 18 ஆயிரம் பேரையும் பெற்றுத் தந்த பெற்றோர்களாகிய உங்களை இந்த வீரமுரசு நிகழ்வு மூலம் கௌரவிப்பு செய்வதனால் மகிழ்ச்சியடைகின்றோம்.

தென்னிந்திய இதயத்தை தொட்ட எமது போராட்டம், கவிதை, பாடல், ஓவியம் என்பவற்றை எழுத வைத்திருக்கின்றது. 20ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் 21ஆம் நூற்றாண்டில் வேகமும், வீச்சும் கொண்டு வீறுநடை போடுகின்றது. முகமாலையில் நின்ற எதிரியின் முதுகெலும்பை உடைத்தவர்கள் நீங்கள். அரசு நினைக்கின்றது மக்கள் வசதிமயப்படுத்தப்பட்டு விட்டார்கள், புலிகள் சொகுசு மயப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்று, உரிமைப் போருக்கு கேடுகள், தடைகள் வந்தால் அதை உடைப்பவர்கள் எம் தமிழர்களே. வீடு எம்முடையதாக இருக்க நாடு நம்முடையதாக இருக்க வேண்டும். காலத்தை உணர்ந்து, நேரத்தை உணர்ந்து தந்திரோபாயங்களை மேற்கொள்பவர் எம் தலைவர். போராட்டமே வாழ்வாகவும், வாழ்வே போராட்டமாகவும் மாற்றி, நாம் மீண்டும் ஒரு முறை எமது தேச விடுதலையை வென்றெடுக்கப் புறப்படுவோம் எனத் தெரிவித்தார்.

கனகசிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வடபோர் முனை வழங்கல் பகுதி பொறுப்பாளர் குறளமுதன், தம்பகாமம் கிராம சேவையாளர் புவனராசா முல்லையடி கிராமசேவையாளர் கண்ணப்பமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைத்தார். மாவீரரின் பொதுப் படத்துக்கான ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன்பன் ஏற்றி வைத்து மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மாவீரர்களது திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடர் அவர்களது பெற்றோர்களால் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து - அரசகேணி கிராம உத்தியோகத்தரினால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டு போராளிகள், பொதுமக்கள் அனைவராலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்தநிகழ்வில் பளை மத்திய கல்லூரி மாணவிகள் டிலக்சியா, சுவேந்தினி, குவேந்தினி ஆகியோரின் நடனநிகழ்வும் பேபி ஆசிரியையின் நெறிப்படுத்தலில் சங்கநாதம் நிகழ்வும், தமிழீழ மகளிர் கலை பண்பாட்டுக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## திறப்பு விழா

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக திறப்புவிழா இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரைச்சி உதவிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் ந.பகீரதன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

## பதினான்கு ஈழ அகதிகள் மன்னார் திரும்பினர்!

தமிழகத்திலிருந்து கடந்த சனிக்கிழமை குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 14 அகதிகள் மன்னாரை வந்தடைந்தனர்.

இந்தியாவிலிருந்துஆற்றிவரப்பட்டு இடையில் மண்திட்டி ஒன்றில் அநாதரவாக இறக்கி விடப்பட்டிருந்த இவர்களை, வலை தேடச் சென்ற மூன்று மீனவர்கள் மீட்டுவந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைக் கைது செய்த கடற்படையினர் பொலிஸாரிடம் கையளித்ததையடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் - அழைத்துவந்த மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## பயிற்சி நெறி

நலவாழ்வு, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவுடன் திலீபன் மருத்துவ சேவையினரால் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் சேவையாற்றுகின்ற சுகாதார சேவையாளர்களுக்கான பொதுச்சுகாதார பயிற்சி நெறி கிளிநொச்சியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நடுவப் பணியகத்தில் நடைபெற்று வருகின்றது.

இவர்களுக்குரிய பாடநெறிகளை மருத்துவர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓமந்தை சோதனைச் சாவடியில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது!

வவுனியா

உலங்கு வானூர்திக்குரியவை எனச் சந்தேகிக்கப்படும் இயந்திர பாகங்களை மருந்துப் பொருட்களுடன் சேர்த்து கொண்டு சென்றார்கள் என்பதற்காக மூவர் ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடியில் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் பின்னர் விசாரணைக்காக வன்னிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மருந்துப் பொருட்களுடன் கொண்டு செல்லப்பட்ட அந்த இயந்திர பாகங்கள் உலங்கு வானூர்திக்குரியவை அல்ல என்று தெரியவந்துள்ளதாகவும், இருப்பினும் இதுகுறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாகவும், விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த பெத்தேவெல தெரிவித்தார்.

இதனிடையே, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்காகப் பொருட்களை ஏற்றிச்சென்ற 2 லொறிகளும், பொலிஸாரினால் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் ஒருவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர் என்றும் கூறப்படுகிறது.



கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கில்- தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் ஏற்றிவைத்து உரைநிகழ்த்துவதைப் படங்களில் காணலாம்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜீன் - 21

1675 - உலகில் மிகப் புகழ் பெற்ற தேவாலயங்களில் ஒன்றும் கோசிக் கட்டடக்கலைக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கும் லண்டன் செயின்ட் போல் தேவாலயத்துக்கு அடிக்கல் இடப்பட்டது. 1666 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் அடியோடு அழிந்து போன பழைய தேவாலயம் இருந்த இடத்திலேயே இது அமைக்கப்பட்டது.

1808 - 'போரான்' என்ற மூலகத்தைக் கண்டு பிடித்துள்ளதாக தெனாட் என்பவரும் கே.லூசாக் என்பவரும் அறிவித்தனர்.

1852 - ஹிண்டர் கார்ட்ன் கல்வி முறையை அறிமுகம் செய்த பிரான்ஸீயக் கல்வியியலாளரான. பிரடெரிக் வில்ஹெல்ம் ஒகஸ்ட் ஃப்ரோபெல் காலமானார.

1857 - 'கோபால்ட் புளு' 'ஹைட்ரஜன் பெர்ராக்ஸைட்' ஆகியவற்றைக் கண்டு பிடித்தவரும், போரான் மூலகத்தைக் கண்டு பிடித்தவர்களில் ஒருவருமான லூயிஸ் ஜாக்யூஸ் தெனார்ட் காலமானார்.

1900- பிலிப்பைன்ஸில் விடுதலை கோரிப் போராடிவரும் போராளிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டு தமது அரசுடன் ஒத்துழைத்தால், பொது மன்னிப்பு வழங்குவதாக அமெரிக்க இராணுவ ஆளுநர் ஜெனரல் ஆர்தர் மெக் ஆத்தர் பிலிப்பைன்சில் வைத்து அறிவித்தார். போராளிகள் இதற்கு செவி சாய்க்காததால் போர் தொடர்ந்தது.

1913 - முதன் முதலாக பரசூட்மூலம் பெண்மணி ஒருவர் குதித்து சாதனை புரிந்தார். லொஸ் ஏஞ்சல்சில் திருமதி. ஜோர்ஜ் தோம்ஸன் என்பவரே விமானத்தில் இருந்து பரசூட்டின் மூலம் குதித்தவராவார்.

1916 - மெக்ஸிக்கோ ஜனாதிபதி கர்ரன்ஸா அமெரிக்கப்படைகளை எதிர்த்துப் போரிடும் படி தனது படைகளுக்கு உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து அமெரிக்கப் படையினர் பலர் கொல்லப்பட்டனர். மெக்ஸிக்கோவை விட்டு வெளியேறாவிட்டால் இதே நிலை தொடரும் எனவும் ஜனாதிபதி கர்ரன்ஸா எச்சரிக்கை விடுத்தார்.

1917 - ரஷ்யாவில் முதன் முதலாக அமைக்கப்பட்ட படைப் பிரிவான 'மகளிர் மரணப் படை' என்ற படைப்பிரிவின் அணிவகுப்பு நடந்தது. இந்த அணிவகுப்பை ரஷ்யப் பிரதமர் அலெக்ஷாண்டர் ஃ பெடரோவிச் கெரன்ஸ்க்கி, பெர்டோகிராடில் வைத்து ஏற்றுக் கொண்டார்.

- கனடாவில் தோன்றிய உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக 'உணவுக் கட்டுப்பாடு அதிகாரி' முதன்முதலாக நியமிக்கப்பட்டார்.

- சுரங்கத் தொழிலாளர்கள் அனைவரும் பணிபுரியும் காலத்தில் தொழிற்சங்க உறுப்பினர்களாக அவர்கள் இருத்தல் அவசியம் என்ற தொழிற் சங்கக் கோரிக்கையை பிரிட்டனில் நிலக்கரிச் சுரங்க உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

1918 - அயர்லாந்துக்கு தன்னாட்சி வழங்கும் திட்டத்தையும் , இராணுவத்துக்குக் கட்டாயமாக ஆள் திரட்டும் திட்டத்தையும் கைவிட்டதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

1920 - ஜேர்மனி,பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி , பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கான போர் இழப்பீட்டுத் தொகையை 42 தவணைகளில் கொடுத்து முடிக்க வேண்டும் என நேச நாடுகளது போர் உயர் சபை உத்தரவிட்டது.

1948 - ஒவ்வொரு பக்கமும் இருபத்தி மூன்று நிமிடங்கள் பாடக் கூடிய நுண்வரி இசைத்தட்டும், நிமிடத்துக்கு 33.33 முறை சுற்றக் கூடியதுமான ஒரு புதிய இசைத் தட்டு, அட்லாண்டிக் நகரில் நடந்த கொலம்பியா பிரதிநிதிகள் விற்பனை மாநாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட, இந்த இசைத் தட்டை வடிவமைக்கும் வழிமுறையை க்ண்டு பிடித்தவர் டொக்டர் பீல்ட்டர் கோல்ட் மார்க் என்பவராவார்.

- மான் செஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் வில்லியம்ஸ் சீனாலும் , டாம் கில்பர்னாலும் உருவாக்கப்பட்ட மார்க் 01 என்ற கணினியின் நினைவகத்தில் சேமித்து வைத்திருந்த தரவுகள் முதன்முறையாக மீளப் பயன்படுத்தப்பட்டது.

- இந்தியாவின் இறுதி பிரித்தானிய ஆளுநர் பதவி விலக , சுதந்திர இந்தியாவின் முதல் ஆளுநராக ராஜாஜி பதவி ஏற்றார்.

1951- யாழ்ப்பாணத்தில் முதல் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்த ஈழகேசரி பொன்னையா காலமானார்.

1980 - ஒன்பது வயதுகளிலே காந்தியின் கொள்கைகளால் கவரப்பட்டு, 14 வயதிலேயே இந்திய சுதந்திரப் போர் தொடர்பில் மேடைகளில் ஏறி முழக்கமிட்டவரும், இவர் பற்றிய தகவல் தருபவர்களுக்கு 10 ஆயிரம்பவுண் வழங்கப்படும் என்ற விளம்பரம் மூலம் பிரிட்டிஷ் படைகளால் தேடப்பட்டவருமான இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் சின்ன அண்ணாமலை என அழைக்கப்பட்ட நாகப்பன் மரணமடைந்தார்.

1988 - இந்திய இராணுவத்தால் முல்லை மாவட்டம் மணலாறு பிரதேசத்தில் 'செக்மேற் 01 'என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

1990 - ஈரானில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் நான்குக்கு மேற்பட்ட பெரிய நகரங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர்.

1992 - செக்கோஸ்லாவிய நாட்டின் பிரிவினை தொடர்பாக உடன்பாடு காணப்பட்டு விட்டதாக, ஸ்லோவாக் தேசியத் தலைவர் விளாடிமிர் மெக்கியரும், செக்கன்சர் வேடிவ் தலைவர் வாக்கியேவ் கௌஸ் ஸீம் இணைந்து அறிவித்தனர்.

- லீப் வருடத்தைத் தவிர ஏனைய வருடங்களில் நீண்ட பகல் பொழுதுடைய தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சுயநிர்ணய உரிமைப் பிரகடனம் உலகிற்கு விடுத்துள்ள செய்தி...

மீண்டும் பௌத்த சிங்கள பேரினவாதம் தென்னிலங்கையிலும், தமிழர் தாயகத்தின் தலைநகரான திருமலையிலும் மூர்க்கத்தனமாக எழுச்சி கொண்டதால் - தமிழ்மக்களுககும், தமிழ்த் தேசியத்திற்கும் எதிராக தமது நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்ட வகையில் விஸ்தரிக்கத் தொடங்கியுள்ள சூழ்நிலையானது - சமாதான சூழலின் எதிர்காலத்தை முற்றிலும் கேள்விக்குறியாக்கிவிட்டுள்ளது என்பதே இன்றைய இலங்கையின் அரசியல் யதார்த்தமாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர் - மீண்டும் முனைப்புக்கொள்ள ஆரம்பித்த பேரினவாதிகளின் மீளுயிர்ப்புக்கு இந்த அரசின் சமாதான எதிர்ப்புக் கொள்கைகளும், அந்த அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினரின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு என்ற பெயரிலான, தமிழினத்துக்கு எதிரான கொள்கைகளும், பிரதான உந்துசக்தியாய் இருந்த அதேவேளை, இலங்கையின் அரசியலில் பௌத்த பிக்குகள் நாடாளுமன்றத் தேர்தலூடாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாகி மஞ்சள் அங்கியுடன் நாடாளுமன்றக் கதிரைகளில் அமர்ந்து இனவெறி அரசியல் பேச ஆரம்பித்ததும் முக்கிய காரணமாகும்.

இந்த அரசில் பிக்குகள் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய என்னும் கட்சியின் பின்னாலிருந்து இயக்குபவர்களும் - இயங்குபவர்களும் வெளிப்படையாக இனங்காணப்பட்ட சமாதான முயற்சிகளின் எதிர்ப்பாளர்களான பௌத்த சிங்கள இனவாத சித்தாந்தவாதிகளான தென்பகுதி அறிவுஜீவிகளேயாவர்.

இவாகள் எந்தக் காலத்திலும் தமிழ்மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளையும், தமிழ்த் தேசியத்தின் தனித்துவத்தையும், தமிழர்களின் பாரம்பரிய தாயகக் கோட்பாட்டினையும் ஏற்றுக்கொண்டவர்களுமல்லர், ஏற்றுக் கொள்ளப்போகின்றவர்களும் அல்லர்.

ஒடடுமொத்தமாகக் கூறவதானால், தமிழர் தம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்களின் இனத் தனித்துவத்தை இவர்கள் முற்றாக நிராகரிப்பவர்களாக இருப்பதுடன், தொடர்ந்தும் தமிழர்களுக்கு எதிரான இராணுவ ரீதியிலான ஒடுக்குமுறையினைத் தீவிரப்படுத்தி அவர்களைப் போர்முனையில் தோற்கடித்து அடிமைகொள்ள வேண்டும் - அவர்களின் தாயக பூமியை முற்றிலும் ஆக்கிரமித்து சிங்களமயமாக்கவேண்டும் என்ற வெறியுணர்வு தலைக்கேறியவர்களாகவும் உள்ளமையே இன்றைய இந்த நாட்டின் அழிவுநிறைந்த - அமைதியற்ற - அச்சமூட்டும் நிலைக்கு ஒரே காரணமாகும்.

மனிதநேயம் முற்றாக மரணித்துள்ள நிலையில், பௌத்த சிங்கள பேரினவாதிகள் இன்று தென்பகுதியிலும், திருமலையிலும் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தீவிரமடைய ஆட்சியாளரின் மௌன அங்கீகாரமும் ஒரு முக்கிய காரணமாகும்.

வெளிப்படையாக மனித உரிமை, அமைதி, சமாதானம் என்றெல்லாம் பேசி அறிக்கைவிட்டு - சர்வதேசத்தை ஏமாற்றிவரும் தென்பகுதி ஆட்சித் தலைமைகள் உள்ளூர மேற்குறித்த எந்தவொரு விடயத்திலும் விருப்பார்வத்துடன் கூடிய அக்கறை கொண்டவர்களாக இல்லை என்பதை கடந்த ஓராண்டுக்கும் மேலான ஐ.ம.சு.முன்னணி அரசின செயற்பாடுகள் உறுதிசெய்துள்ளன.


இந்த நிலையில் பொதுக் கட்டமைப்பு என்ற சொல்லை வைத்துக்கொண்டு ஒரு நுணுக்கமான - கச்சிதமான- தமிழினத்தை ஏமாற்றும் நாடகமொன்றை அரங்கேற்றம் செய்துள்ள அரசும் - ஏனைய தென்பகுதி அரசியல் தலைமைகளும் தமிழ்மக்களின் தலையில் மிளகாய் அரைக்கும் கைங்கரியத்தையே செய்துவருகின்றன.

இந்தப் புதிய மூலோபாயம் தமிழ் மக்களை இன்னொரு வகையில் ஏமாளிகளாக்கும் தந்திரோபாயத்தின் அடிப்படையில் ஆனதென்பதை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதை- நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள், அறிவுஜீவிகள், துறைசாா வல்லுநர்கள், மதத் தலைவர்கள் அனைவரும் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடி வெளியிட்ட தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனம் உலகிற்கு ஓங்கி உரைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

இப் பிரகடனமானது கடந்த பல தசாப்த காலமாகவே குடியுரிமை, நிலம், மொழி, கல்வி ரீதியாக மட்டுமன்றி, இராணுவ ரீதியாகவும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவரும் தமிழினம், இனியும் சமாதானத்தின் பேரால் பேச்சுவார்த்தைகள் என்ற மூலோபாயத்தின் அடிப்படையில் ஏமாறத் தயாராக இல்லை என்ற செய்தியை தென்பகுதி பௌத்த சிங்கள இனவாதிகளுக்கு ஓங்கி அறிவித்துள்ளது என்பது முக்கியமான விடயமாகும்.

பேரினவாதிகளின் அதிகாரத் திமிருக்கு அஞ்சி அடங்குபவர்களாக தமிழ்மக்கள் இனிமேலும் பொறுமைகாத்து இருக்கமாட்டார்கள் என்பதை இந்தப் பிரகடனத்தின் மூலமாவது உணரத்தவறும் - ஆட்சியாளர்களும் பௌத்த மத வெறியர்களும், சிங்கள இனவாதிகளும் வரலாற்றில் கசப்பான, துயரம்மிக்க பாடங்களைப் படிக்கவேண்டிய நிலையை தாங்களாகவே உருவாக்க முயல்கின்றனர் என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

# நாடும் நடப்பும்



பௌத்த பேரினவாதத்துள் இலங்கை

## ‘ஊர்சுற்றி’யார் பார்வையில்...

# உடன்பிறந்தே கொல்லும் வியாதியாக தமிழர் தாயகத்தில் சகுனியாக சங்கரி!

‘அழுவார் அழுவாரெல்லாம் தன் கரைச்சல், துருவன் பெண்டிலுக்கு அழ ஆளில்லை’ என்று தமிழில் ஒரு நாட்டுப்புறப் பழமொழி இருக்கிறது. சங்கூதியார் சங்கரி சில கொழும்பு ஊடகங்களுக்கு விடுத்துவரும் அறிக்கைகளைப் பார்க்கும்போது, இந்தப் பழமொழி தான் எனக்கு நினைவுக்கு வருகிறது என்று சொல்லிக் கொண்டுவந்து என்முன்னே அமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

தமிழ்ச்செல்வன் வெற்றியுடன் போய்த்திரும்பிய ஐரோப்பிய நாடுகளுக்கு ஜனநாயகத்தின் நவீன காவலர் சங்கரி திக் விஜயம் மேற்கொள்ளப் போவதாகவும் அரசாங்கம் மறைமுகமாகத் தெரிவித்திருந்தும்கூட, தமிழ்ச் செல்வனை நல்லமுறையில் வரவேற்று உபசரித்த அந்த நாடுகள் சங்கரிக்கும் அப்படி வரவேற்புக் கொடுக்க வேண்டுமென்று கொழும்பு ஊடகம் ஒன்று கோரியிருந்தது. சங்கரி போனதும் தெரியாது வந்ததும் தெரியாது. இப்பொழுது நீர் அவரைப் பற்றிச் சொல்லும் போதுதான் அவர் எங்கே இருக்கிறார் என்று கேட்கத் தோன்றுகிறது என்றேன்.

போன சுவடு தெரியாமலே வந்துவிட்டார் போலிருக்கிறது! ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்குக் கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்லி, பின்னர் அந்தக் கடிதம் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து, கொழும்பிலுள்ள ஊடகங்களில் வெளிவரும் வெளிநாட்டுத் தூதர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளையும் சங்கரியார் சந்தித்துத் தனது வயிற்றெரிச்சலைக் கொட்டியுமிருக்கிறார். இவரை யாரும் கணக்கெடுக்கவில்லை.

இனவெறி ஊடகங்கள் தமிழின விரோதத்துக்கு இவரைப் பயன்படுத்தி இவர்தான் ஜனநாயகத்தின் காவலர் என்றும் தனிப்பெரும் தமிழ்த் தலைவர் என்றும் முருங்கையில் ஏற்றிவிட்டன. இதனால் தன்னை மறந்தநிலையில் தமிழ்ச்செல்வன்போன நாடுகளுக்கு ‘உண்மை’ சொல்வதற்காகப் புறப்பட்டுச் செல்வதாக அதே ஊடகங்கள் கொட்டுமேளம் கொட்டின. கொழும்பிலுள்ள அதிகாரிகளே இவரைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளாதபோது அந்த நாடுகள் திரும்பிக்கூடப் பார்க்கத் தயாராக இருந்திருக்கமுடியுமா? என்று பரமசிவம் சொன்னார்.

இதனால்தான் மீண்டும் இவரது அறிக்கைகளுக்காகவே காத்திருக்கும் கொழும்பு இனவெறி ஊடகங்கள் இப்பொழுது இவரது அறிக்கை என்ற பேட்டியை வெளியிட்டிருக்கின்றன. தமிழ் விரோதப் போக்கு எங்கே கிடைத்தாலும் இந்த ஊடகங்களுக்கு விருந்து கிடைத்த மாதிரி. இப்ப அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றேன்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் உண்மை நிலையை சர்வதேச சமூகம் முற்றாக அறிந்து கொள்ளவில்லையென்றும், விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்துவதன்மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்று எல்லோரும் நினைப்பதாகவே தோன்றுகிறதென்று சங்கரி சொல்கிறார். அத்துடன் பிள்ளைகளைப் பிடிக்கிறார்கள், எதிரிகளைக் கொலை செய்கிறார்கள், ஜனநாயகத்துக்கு விரோதமாக நடக்கிறார்கள் என்று பழைய பல்லவியைப் பாடியிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார். இது மட்டுமல்ல ஜே.வி.பி., பிக்குகள் கட்சியினர் சொல்வதுபோல பொதுக் கட்டமைப்பு புலிகளுக்குச் சட்டபூர்வமான அந்தஸ்த்தைப் பெற்றுக்கொடுத்துவிடுமென்றும் சொல்லியிருக்கிறாராக்கும் என்றேன்.

அத்துடன், யாழ்ப்பாணத்துக்கு எவர் அரசனாக வந்தாலும் எனக்குக் கவலையில்லை, சிறுவர்களைப் படையில் சேர்ப்பதை நிறுத்தவேண்டும், கொலை செய்வதை நிறுத்தவேண்டும். தமிழ்ப்பகுதிகளில் ஜனநாயகம் செழிப்புறவேண்டும் என்று மூன்று நிபந்தனைகளை சங்கரி விதித்திருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

தான் போக வழியைக் காணவில்லையாம், மூஞ்சூறு விளக்குமாற்றையும் காவிக்கொண்டு போச்சுதாம் என்ற கதையாய்த்தானிருக்கு. இவர் இருக்கவே இடமில்லாமல் மக்கள் நிராகரித்துவிட்டார்கள். இவர் யாழ்ப்பாணத்துக்கு இராசாவாக இருப்பது போலவும் இவரது நிபந்தனைகளை புலிகள் ஏற்றுக்கொண்டால் இவர் அவர்களுக்கு முடிசூட்டி வைக்கத் தயாராக இருப்பதுபோலவும் கூறியிருக்கிறார் என்றேன்.

பசித்தவன் பழங் கணக்குப் பார்ப்பதுபோல என்றும் அவரது நிலையைப் பார்த்துச் சொல்லலாம். கட்சிக்குக் கட்சி தாவிவந்து தமிழர் கூட்டணி அவருக்கு மதிப்புக் கொடுத்து வைத்திருந்தது. நண்டு கொழுத்தால் வளையிலிருக்காத மாதிரி இவரும் தலைமை தேடி, உள்ளதும் இல்லாமலிருக்கிறார். ஆனால் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர் தாயக மக்களுக்கு எந்த உதவியும் கிடைக்காமல் தடுப்பதில் இனவெறி பிடித்த சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள்தான் கெடுதியாக இருக்கிறார்களென்றால் சங்கரி என்ற சகுனி அவர்களையும் மிஞ்சிவிடுவார் போலிருக்கிறதே என்றார் பரமசிவம்.

உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்று இந்த சகுனிகளை வைத்துத்தான் சொல்லியிருப்பார்கள்போல என்றேன்.

நீர்சொல்வது சரிதான் என்று நடந்தார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு

## சிங்கள தேசம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை!

இன்றும் சிங்கள தேசம் தமிழ் மக்களை சரியான விதத்தில் புரிந்து கொள்ளவில்லை. எம் தமிழ் மக்களின் (புலிகள்) பொறுமையை இழந்து முடிவிற்குக் கொண்டுவர நினைக்கின்றனர். எமது தமிழ்ப் பிரதேசங்கள் யுத்தத்தின் கொடுமையாலும், அடுத்துவந்த கடற்கோள் அனர்த்தத்தினாலும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் போர் வெறியர்கள் அல்லர். ஆனால் வலிந்து திணிக்கும்போது அதை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்க வேண்டும். தமிழர்களின் தலைமை பொறுமையைக் காத்துக்கொண்டிருக்கின்றது. புலி படுப்பது பாய்வதற்கே அன்றி பயத்தினாலல்ல என்பதை உணரவேண்டும். தமிழ் மக்களைச் சிங்களக் காடையர்கள் சேருநுவரவில் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர்.

பொது மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்குக் கொடுக்கச் சென்ற படகுகளை எரித்திருக்கின்றனர். பாரவூர்திகளையும் எரித்திருக்கின்றனர். இது வெறும் தாக்குதல் அல்ல. தமிழர்களின் பொறுமையைச் சீண்டிப்பார்க்கும் செயல். மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கான செயல். அண்மையில் புனர்வாழ்வுக்கழகத்தின் பெருந்தொகைப் பணம், வாகனம தடுத்து நிறுத்தியுள்ளமை மிகவும் கீழ்த்தரமான குரோதமான செயல். இச் செயற்பாடுகளினால் சிங்கள தேசம் நல்ல பாடத்தைப் படிக்க இருக்கின்றது.


தமிழ் மக்கள் போர், ஆழிப்பேரலை இப்போது காடையர்களின் தாக்குதல் என்பவற்றால் அழிவுகளை சந்தித்துள்ளனர். இடம்பெயர்ந்துள்ளனர். ஆகவே சிங்கள தேசம் எம் தமிழ் மக்களை எப்போதும் எந்த வழியிலானாலும் அழிக்கவே நினைக்கின்றது. இதற்குத் தமிழ் மக்கள் இடங்கொடுக்கப் போவதில்லை. அண்மையில் புத்தரின் சிலையினால்அப்பாவித் தமிழ் உயிர் அழிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தொடர்ச்சியான அழிவுகளைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். இதற்கு வெகுவிரைவில் தீர்க்கமான முடிவுகள் கிடைக்கும். அது தான் ஈழப் போர். அந்தப் போராட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் முற்றாகக் கைப்பற்றப்படும். அதன் பின்பே தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ முடியும். ஆகவே எமது தலைமையின் முடிவையே எதிர்பார்த்திருக்கின்றோம். எமக்கு பூரண அமைதி கிடைக்கும் வரை போராடுவோம்.

**ஆர்.என்.கோபால்.** வடமராட்சி கிழக்கு.

-தெற்குத் திசையினிலே- - கொழும்பிலிருந்து இந்திரஜித் -

# தெற்கில் உறவு விட்டுப் பிரிந்தாலும் அரசியலில் வளரும் உறவுகளும், பிரிவுகளும்



இலங்கை அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலை உடனடியாக தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லையென்றே கருதப்படுகிறது. ஏனெனில் ஜே.வி.பி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் அமைத்த கூட்டு முன்னணி முறிவடைந்துள்ளமையை அடுத்து, மேலும் பல முறிவுகள் ஏற்படும் ஏது நிலைகள் எழுந்திருக்கின்றன. அது அரசாங்கத்தை மேலும் சிக்கல் நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.



குறிப்பாக பொதுககட்டமைப்பு விடயத்தில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட அதே நேரம் - ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலகிச் சென்று விடக்கூடாது என்ற கொள்கையை அமைச்சர்களான அநுர பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, அநுர பிரியதர்சனயாப்பா, ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே போன்றோர் கொண்டிருந்தனர். பின்னர் இவர்களின் கொள்கைகளிலும் சிறிய மாற்றங்கள் ஏற்பட்டன. அந்த மாற்றங்கள் ஜனாதிபதிக்கு சாதகமான மாற்றங்களாக இருந்தன. எனினும், ஒரு அமைச்சர் மாத்திரம் ஜே.வி.பியின் கொள்கைகளை ஆதரிப்பவராக இருக்கிறார். தாம் ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் பொதுக்கட்டமைப்பை தடுத்து விடலாம் என இந்த அமைச்சர் எண்ணிய போதும், அந்த எண்ணம் தவறாகிப் போனது. அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றே நம்பப்படுகிறது.

ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு திட்ட வரைபை எவருக்கும் காட்டாமல், மிகவும் கவனமாக வைத்திருந்தார். பல்வேறு அழுத்தங்கள் காரணமாக அரசாங்க அமைச்சர்கள் சிலபேருக்கு அதனை அவர் கையளித்தார். இதனை தமக்குச் சார்பாக பயன்படுத்திக்கொண்ட குறிப்பிட்ட அமைச்சர் பொதுக்கட்டமைப்பின் உட்கட்டமைப்பு வரைபை ஜே.வி.பியின் பிரசார செயலரின் கைகளுக்கு சேர்ப்பித்துவிட்டார். இதன் பின்னர் குறித்த வரைபை வாசித்து விட்டு, தமக்குத் தெரிவிக்குமாறும் அவர் கேட்டிருந்தார். அதற்கமைய ஜே.வி.பி அந்த வரைபு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என தற்சமயம் வெளிநாட்டில் இருந்து குறித்த அமைச்சருக்குக்கூற அவரும் அதனை ஆமோதித்துள்ளார். இதனையடுத்தே ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவை தீர்க்கமாக அறிவித்தது. எனவே ஜே.வி.பிக்கு சார்பான இந்த அமைச்சருக்கு ஜனாதிபதியின் பக்கம் இருந்து எதிரலைகள் வீசவே செய்யும்.



இதேவேளை பொதுக்கட்டமைப்பு விடயத்தை காரணமாகக் கொண்டு அரசாங்கத்தில் இருந்து விலகியமையை ஜே.வி.பி கட்சிக்குள் இருக்கும் பலர் விமர்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அந்தக் கட்சிக்குள்ளும் பிளவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஜே.வி.பியும் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படுத்தி வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கடந்த 15 ஆம் திகதி முறிவடைந்தது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் புனரமைப்புக்களுக்காக அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு ஜே.வி.பி எதிர்ப்பு வெளியிட்டு வந்த அதே நேரம் -

அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் இருந்து தோல்வியடைந்தமையை அடுத்து, அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவுக்கு வந்தது.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை இந்த விலகலானது, அந்தக் கட்சியின் அரசியல் நலன் கொண்ட விடயத்துக்கும் சார்பானது என்பது உண்மை. அதாவது - ஜே.வி.பி தாம் தொடர்ந்தும் அரசாங்கத்தில் அங்கம் வகித்தால், அடுத்த தேர்தலில் தமது கட்சிக்குப் பாரிய பாதிப்பு ஏற்படும் என நினைக்கிறது. எனவே பொதுக்கட்டமைப்பு விடயத்தை முன்வைத்து, தற்போது அரசாங்கத்தில் இருந்து விலகிக்கொண்டால் அது தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் தற்காப்பு நடவடிக்கையாக இருக்கும் என ஜே.வி.பி நினைத்தது. அதன் அடிப்படையில் அந்தக் கட்சியும் நடந்துகொண்டது.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்கியது. பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தது. இவை அனைத்தும் திறைசேரியில் இருந்த நிதியை மையமாகக்கொண்டு செய்யப்பட்டவையல்ல. வெளிநாடுகளினதும், உலக வங்கியினதும் எதிர்பார்க்கப்பட்ட உதவிகளை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக - பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள் என்ற முனைப்பு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் தயாரிக்கப்பட்ட யொவுன் பெரமுன என்ற இளைஞர் படைத் திட்டத்தின் பேரில் ஒதுக்கப்பட்டிருந்த பெருந்தொகை நிதியைக்கொண்டே மேற்கொள்ளப்பட்டது.


இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட சுனாமி தாக்கம் அரசாங்கத்தின் எண்ணங்களைத் தகர்த்தது. ஏற்கனவே நிதிப்பற்றாக்குறையில் இருந்து அரசாங்கம், இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக தமது நிதிக் கொள்கைகளில் நம்பிக்கையை இழந்தது.

இந்த நிலையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கிய அரசாங்கத்தினால் அவர்களின் பதவிகளை நிரந்தரமாக்கும் திட்டத்தில் பின்னடிப்பு மேற்கொண்டது. இது அரசாங்கத்தில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக்காட்டிலும், ஜே.வி.பியையே அதிகளவில் பாதித்தது. ஏனெனில் பட்டதாரிகளை இலக்குவைத்து தமது அரசியலை முன்னெடுக்கும் யோசனையை அரசாங்கத்திடம் முன்வைத்தது ஜே.வி.பியாகும். இந்த நிலையில் ஜே.வி.பி தாம் எடுத்த முடிவு சரியானதே என்ற நிலையில் அடுத்தகட்ட நகர்வை ஆரம்பித்துள்ளது. பொதுக்கட்டமைப்புப் பிரச்சினை தீர்ந்தபின்னர், அந்தக் கட்சி மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எதிர்காலத்தில் இணைந்துகொள்ளும் வாய்ப்புகளும் இருக்கின்றன.

தென்னிலங்கையின் அரசியல் மாற்றம் காரணமாக நாடாளுமன்றம் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் தொங்கும் நிலைக்கு வந்துள்ளது. பொதுக் கட்டமைப்பில் பல காரணங்களை முன்வைத்து ஜனாதிபதி மிகவும் உறுதியாக இருக்கிறார். தமது 10 வருட ஆட்சிக்காலத்தில் கடைசிக் கட்டத்திலாவது ஏதாவது முனைப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம், பொதுக்கட்டமைப்பை அமைக்காவிட்டால் தாம் பதவியில் இருக்கும் ஒரு வருடகாலப் பகுதியில்கூட ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முடியாது என்ற கட்டம் எழுந்துள்ளமை, மீண்டும் ஒருமுறை தமது நாடாளுமன்ற பிரவேச எண்ணத்துக்கு இந்தச் செயற்பாடு உதவும் என்பவை அவர் இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உறுதியாக இருப்பதற்கான காரணங்களாகும்.

ஜனாதிபதி தற்போதைய சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரையும் நம்பியிருக்கிறார். இதனை மையமாகக் கொண்டே அவர் ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்றதைத் தடுக்காமல் இருந்தார். பௌத்த பிக்கு அரசியல்வாதிகளின் உண்ணாவிரதங்களை மழுங்கடிக்கச் செய்தார் என்பது உண்மைகள்.

ஆனால் தற்சமயம் மீண்டும் அவர் பொதுக்கட்டமைப்புப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவது, இந்த



இரண்டு தரப்பினதும் ஆதரவை இழக்கச் செய்யும் நடவடிக்கைகளாகும்.

எனவே இறுதி நேரம்வரை காய் நகர்த்தல்களில் ஈடுபட ஜனாதிபதி யோசிக்கிறார். அதன் அடிப்படையில் இறுதி நேரத்தில் பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் இருக்கும் தீர்மானத்தை அவர் எடுக்கும் வாய்ப்புள்ளது. அதுவும் சரிவராவிட்டால், அடுத்தகட்ட மாக நாடாளுமன்றத் தேர்த லுக்குச் செல்லும் நடவடிக்கை களிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

## காலங்கள் ஊடாக

## புனித பெனடிக்ற் - ஆசீர்வாதப்பர் வழிவந்த பாப்பரசர்களின் சரிதை


நேற்றைய தொடர்ச்சி...

### பெனடிக்ற் III ஆசீர்வாதப்பர் (855-858)



புனித 4 ஆம் சிங்கராயர் பாப்பரசரின் மரணத்தின் பின் , 855 ஆம் ஆண்டு ஆடி 17 ஆம் நாள் , 105 ஆவது பாப்பரசராக இவர் தெரிவானார். ஆனால் இவருடைய காலம் சிக்கலான காலமாகியது. புனித 4 ஆம் சிங்கராயர் பாப்பரசர் இறந்த அதே தினம் பெனடிக்ற் III பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டாலும், அவர் 855 ஆம் ஆண்டு புரட்டாதி 29ஆம் நாளே திருநிலைப்படுத்தப்பட்டார். காரணம் பேராயர் அனஸ் தாசியஸ் என்பவர் தன்னைத் தானே பாப்பரசராகப் பிரகடனப்படுத்தி ரோமை நோக்கிச் சென்றார். பெனடிக்ற் III ஆம் பாப்பரசரைப் பிடித்து சிறையிலடைத்தார். ஆனால் ரோமையர்களுள் பெரும்பான்மையினர் பெனடிக்ற் III யே ஆதரித்தனர். இதனால் எதிர்பாப்பரசர் அனஸ்தாசியஸ் கைது செய்யப்பட்டு, ஒரு பொது நிலையினர் மட்டத்திற்குத் தள்ளப்பட்டார், இதன் பின் பெனடிக்ற் III மிக ஆடம்பரத்துடன் திருநிலைப்படுத்தப்பட்டார். திருச்சபையை மூன்று வருடங்கள் ஆட்சி செய்த பெனடிக்ற் III 858 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 17 ஆம் நாள்இறையடி சேர்ந்தார்.

### பெனடிக்ற் IV ஆம் ஆசீர்வாதப்பர் (900 - 903)



9ஆம் அருளப்பர் பாப்பரசரின் மரணம் 900 ஆம் வருடம் தை மாதம் இடம்பெற்றது. இவரின் மரணத்தையடுத்து பெனடிக்ற் IV 900 ஆம் ஆண்டிலேயே பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 118 ஆவது பாப்பரசராவார். இவருடைய காலத்தில் சறகீன்ஸ் ஐரோப்பாவுக்குள் ஊடுருவல் செய்தனர். இவரைப்பற்றி அதிகம் குறிப்பிடுவதற்கு இல்லை. இவர் 903 ஆம் ஆண்டு ஆடி மாதம் இறையடி சேர்ந்தார்.

### பெனடிக்ற் V ஆசீர்வாதப்பர் (964 -966)



இவர் எட்டாம் சிங்கராயர் பாப்பரசரின மறைவுக்குப் பின் பாப்புவாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதுவும் 12 ஆம் அருளப்பர் காலத்தில் பிரச்சினைகள் நிறைந்த வேளையில் ஒரு தியாக்கோனாக இருந்து பாப்புவாகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் ஒட்டோச் சக்கரவர்த்தி இவரை ஜேர்மனிக்குக் கொண்டு சென்று ஹம்போர்க் நகரப் பேராயரின் கண்காணிப்பில் விட்டுவைத்தார்.

இவர் 966 ஆம் ஆண்டு ஆடி 4 ஆம் திகதி ஹம்போர்கிலேயே இறந்தார். இவர் 133 ஆவது பாப்பரசராவார்.

### பெனடிக்ற் VI ஆசீர்வாதப்பர் (973 -974)




இவர் 13 ஆம் அருளப்பர் 972 புரட்டாதி 6 ஆம் திகதி இறந்த அன்றே தெரிவு செய்யப்பட்டார். இந்த வேளை புனித தியோடோர் ஆலயத்தில் கர்தினால் தியாக்கோனாக இருந்தார். ஒட்டோ சக்கரவர்த்தியின் அங்கீகாரம் 973 தையில் தான் கிடைத்தது. இவரது ஒன்றரை வருட ஆட்சி இவரது மரணத்தைப் போலவே அவலமாக இருந்தது. இவர் 973 ஆம் ஆண்டு சித்திரையில் சில ரோம் பிரபுக்களால் சிறைவைக்கப்பட்டார். இரண்டு மாதங்களின் பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டார். இவர் திருச்சபையின் 135 ஆவது பாப்புவாகும்.

### பெனடிக்ற் VII ஆசீர்வாதப்பர் (974 - 983)



6ஆம் பெனடிக்ற் பாப்புவின் அவலமான மர ணத்தின் பின்னர், அவரைக் கொன்ற பொனிப்பாஸ் என்பவர் லஞ்சம் கொடுத்து தன்னையே 7 ஆம் பொனிப்பாஸ் என்ற பெயரில் பாப்பரசராகப் பிரகடனப்படுத்தினார். இவர் திருச்சபையின் 15 ஆவது எதிர்ப்பாப்பு ஆவார். ஆனால் ரோமைக் குருக்கள் பெனடிக்ற் VII ஐயே பாப்புவாகத் தெரிவு செய்தனர். எதிர்ப்பாப்பு பொனிப்பாஸ் தன் உயிருக்குப் பயந்து ஓடிய பின் - பெனடிக்ற் VII செய்த முதல் வேலை பணத்துக்காகப் பாப்புமாரைத் தெரிவு செய்யும் முறையைத் தடை செய்ததாகும். 136 ஆவது பாப்புவான இவர் 983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

### பெனடிக்ற் VIII ஆசீர்வாதப்பர் (1012 - 1024)




1012 ஆம் ஆண்டு வைகாசி 12 இல் 4 ஆம் சேர் ஜியஸ் மரணத்தின் பின்னர் 144 ஆவது பாப்புவாக பெனடிக்ற் VIII தெரிவு செய்யப்பட்டார். இவர் தெரிவு செய்யப்பட்ட போது, சாதாரண பொது நிலையினராக இருந்தார். பாப்புவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதும் ஒரு சிறந்த பாப்புவாகத் திகழ்ந்தார். இவர் காலமும் குழப்பம் நிறைந்த காலமாகவே இருந்தது. பாப்பு பெனடிக்ற் தானே முடிசூட்டிய ஜேர்மன் சக்கரவர்த்தி 2 ஆம் ஹென்றியின் உதவியோடு தொந்தரவு கொடுத்த கிறெசென்சியசை ரோமை விட்டுத் துரத்தினார். இத்தாலியின் கரையோரங்களைத் தாக்கிய சறசென்ஸ்களைத் தோற்கடித்தார். இத்தாலியின் மிகச் சக்தி வாய்ந்த பாப்பரசராக இவர் திகழ்ந்தார். 12 வருட ஆட்சியின் பின்னர் 1024 ஆம் ஆண்டு சித்திரை 8 ஆம் நாள் இறையடி சேர்ந்தார்.

நாளை தொடரும்.....


# வடமராட்சியில் நடந்த கண்டனப் பேரணியிலிருந்து...
















# நல்லூரில் நடைபெற்ற பேராளர் மாநாட்டிலிருந்து...













நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற

# தேசிய எழுச்சிப் பேரவையின் ஆறாவது பேராளர் மாநாடு

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஆறாவது பேராளர் தேசிய மாநாடு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் முற்பகல் 10.40 மணிக்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரை மதகுருமார்கள் கானசேகரக்குருக்கள், ராஜகுமார் அடிகளார் மற்றும் மாவீரர் திலகனின் தாயார், யாழ்.நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவஞானசேகரன், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றினார்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள், காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிற்சபேசன், வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சாம்பசிவம், தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த மருத்துவ கலாநிதி கந்தையா, யாழ். நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் சுடரை ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இந்த மாநாட்டில் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம், மா.க.ஈழவேந்தன், சிவநேசன், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவை பேராளர்களின் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் இறுதியில் தமிழர் தாகம் தமிழீழத் தாயகம் என்ற உரிமைக் கோஷம் எழுப்பப்பட்டதுடன் சிங்கள இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறவேண்டும். தமிழ்த் தேசியம் வலியுறுத்தப்பட வேண்டும் என்ற இரு கோரிக்கைகள் தேசிய எழுச்சி பேரவையூடாக தமிழீழத் தேசிய தலைவருக்கு தெரியப்படுத்துவதாக முடிவு எடுக்கப்பட்டது.

இந்தப் பேராளர் மாநாட்டில் மாவட்ட, பிரதேச, கோட்ட, ஊரக தேசிய எழுச்சிப் பேரவை பிரதிநிதிகள், பொது அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துமாறு திருமலையில் அடையாள உண்ணாவிரதம்



திருகோணமலை

பொதுக்கட்டமைப்பை உடன் நிறுவுமாறு கோரிக்கைவிடுத்து நேற்று திருகோணமலை சிவநகர்ப் பகுதியில் அடையாள உண்ணா விரதப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெற்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு நிறுவப்படவுள்ளதாகக் கூறப்படும் பொதுக்கட்டமைப்பு விரைவில் கைச்சாத்திடப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

மேற்படி போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், மதகுருமார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் இன்றும், நாளையும் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முன்னாள்....

உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திய இரு இளைஞர்கள் 9 மி.மீ.பிஸ்ரலினால் இவரைச் சுட்டுவிட்டு இந்த ஓட்டோவுக்கு பின்னால் வந்த மற்றொரு ஓட்டோவில் தப்பிச் சென்றதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து 9.மீ.மீ கைத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும வெற்றுத்தோட்டங்கள் நான்கை கண்டெடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### பேரணியில்....

எமது கடலில் எமக்கேன் பாஸ், விரைவில் முடிவெடுப்போம் விடுதலையை வென்றெடுப்போம், ஏழ் கடலாய் எழுவோம் உன் இறுமாப்பு உடைப்போம், யுத்தநிறுத்தம் தமிழின அழிப்பிற்கான அங்கீகாரம், சிங்கள தேசம் வாழ்வதுபோல் எங்களை இங்கு வாழவிடு, ஆசையை வெறுத்த புத்த துறவிகள் ஆட்சியில் நுழைந்து அராஜகம் செய்வதேன்?, எமது கடலும் எமது நிலமும் அடையும் வரைக்கும் ஓயமாட்டோம் -

காவிபோர்த்திய புத்தர் பரம்பரை பாவித் தமிழரை வதைத்திடலாமோ?, தலைவா ஆணை தந்துவிடு தகர்ப்போம் எதிரிகோட்டைகளை, புத்தன் தந்தது பஞ்சசீலம் அரசு தந்தது பயங்கரவாதம், இணங்கி வாழ இறங்கி வந்தோம் உணரா அரசே பிரிந்து செல்வோம், (14)

### விதார்....

இந்தப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பும் விதார் ஹெல்கிசன் - நாளை மறுதினம் வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவார்.

இதையடுத்து அன்றைய தினமே அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்துக்குச் செல்லும் விதார் ஹெல்கிசன் - சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், அதுகுறித்த இறுதிமுடிவேதும் எடுக்கப்படவில்லையென நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

### பொதுக் ...

இந்தச் சந்திப்புத் தொடர்பாக சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர் -

இந்தப் பேச்சுவார்த்தை எனக்கு திருப்தி தருவதாக அமையவில்லை. இதிலிருந்து அரசில் இருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் சிலருக்கு ஜனாதிபதி ஊடாக வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேறாது போலவே எனக்குத் தென்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களிடம் பேசி பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்து எங்களுடைய நிலைப்பாட்டைக் காட்டவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

### மருதானையில்....

பனவே இந்தப் பையிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 9.45 மணியளவில் மீட்கப்பட்ட இந்த வெடிபொருட்கள் - கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்ற னர்.

### தேர்தலை....

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எனத் தெரிவிக்கப்பட்டபோதும், அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள கட்சிகளிடையே ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் தொடர்பான கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலை இலக்காக வைத்து பிரசாரப் பணிகளை ஆரம்பித்துள்ளது. அந்தக் கட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் அமைப்பாளர்கள் - சுவரொட்டிகளை பல இடங்களில் ஒட்டி, தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - தேர்தலை இலக்காக வைத்து கிராமிய மட்டத்தில் பல கூட்டங்களை ஒழுங்குபடுத்திப் பேசிவருகிறார். எனவே, இவையெல்லாம் திடீர் தேர்தலுக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் என அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

### ஈ.பி.டி.பி...

கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் கடந்த சில மாதங்களாக தங்கியிருந்த இவர், உறவினர் ஒருவரின் திருமணத்துக்காக சில தினங்களுக்கு முன்னர் மொனராகலைக்கு வந்திருந்தாரெனவும், அக்கரைப்பற்றிலுள்ள, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் இடைத்தங்கல் முகாமொன்றில் தங்கியிருக்கும் தனது மனைவி பிள்ளைகளைப் பார்ப்பதற்காக கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்று வந்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

இவர் தனது தாயாரின் வீட்டிலிருந்து முகாமுக்கு செல்லும் வழியில் வைத்தே கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அக்கரைப்பற்று நீதிபதி எம்.எஸ். முகைதீன் சம்பவ இடத்தைப் பார்வையிட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துமாறு கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

பொதுக்கட்டமைப்பை உடன் நிறுவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்து கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை சமசமாஜக் கட்சி உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கருத்து தெரிவிக்கையில்-

சுனாமி நிர்வாக சபை நிறுவப்படுவதன் மூலம் விடுதலைப்புலிகள் பலம்பெற்று விடுவார்கள் எனத் தெரிவித்துஅதனைத் தடுக்க நினைத்தால் விடுதலைப் புலிகள் தனியாக அரசு ஒன்றை நிறுவ வழி சமைத்துவிடும். சுனாமி நிர்வாக சபைதொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானத்தை ஒரு அடியேனும் பின்நோக்கி நகர்த்த கூடாது.

இனவாதத்திற்குஎதிரான சக்திகளைத் திரட்டிக்கொண்டு ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவோம். எனவே இந்த பொதுக்கட்டமைப்பு சமாதானத்திற்கான இறுதித் தீர்வு கிடைக்கும்வரை கொண்டு செல்ல வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமமாக சர்வதேச உதவிகள் கிடைக்காவிட்டால் சர்வதேசம் நேரடியாக தமது உதவிகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊர்காவலர் ஒருவர் திருமலையில் கடத்தல்!

திருகோணமலை - சேருவில பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் 11 மணியளவில் இனந்தெரியாதோரால் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

கவன்திஸ்ஸபுர - சேருவிலவைச் சேர்ந்த சாகான் நந்தசிறி (வயது24) என் பவரே கடத்தப்பட்டவராவார்.

இந்தப் பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் மரங்களை வெட்டிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவரைக் கடத்திச் சென்றதாக சேருநுவர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சேருநுவர பொலிஸா விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - அரலகன்வில பகுதியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலமொன்றை கடந்த சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் படையினர் மீட்டுள்ளதாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட இந்தச் சடலத்தின் தலை மற்றும் உடல் பகுதிகளில் காயங்கள் காணப்படுவதாகவும் - அடையாளம் காண்பதற்காக சடலம் பொலனறுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக அரலகன்வில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

## பொதுக்கட்டமைப்பு பிரேரணை நாடாளுமன்றில் நாளை

சுனாமி அனர்த்த மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பை நிறுவுதல் தொடர்பான பிரேரணை நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. இது தொடர்பாக இரு நாட்கள் விவாதங்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பொதுக் கட்டமைப்பு தொடர்பாக எத்தனை நாட்களுக்கு விவாதங்களை நடத்துவது, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன என்பது குறித்து நாளை நாடாளுமன்றத்தில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என ஆளும்கட்சி அமைச்சர் ஒருவர் கூறினார்.

## பொதுக்கட்டமைப்பை...

நேற்றுக் காலை 10.30 மணியளவில் பருத்தித்துறை -காங்கேசன்துறை கடற்கரை வீதியில் திக்கம் சந்தியிலிருந்து ஒன்றுகூடிய பெருந்திரளான மக்கள் - கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக கரையோர வீதி வழியாக நகர்ந்து மூன்று மைல் தூரத்திலுள்ள பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்தொழிலாளர் சங்க முன்றலை வந்தடைந்தனர்.

திக்கம் சந்தியில் ஆரம்பமான இந்தப் பேரணியில் - யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், இ.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் - 'எங்கள் நிலத்தில் எங்கள் பலத்தில் தாங்கிநிற்போம்' என்ற வாசகம் தாங்கிய பெரிய பதாகையை கொண்டு செல்ல அவர்களின் பின்னே பொது மக்கள் நீண்ட பேரணியாகச் சென்றனர்.

பேரணியில் கலந்துகொண்ட மக்கள் பலத்த குரலில் கோஷங்களை எழுப்பியவாறு சென்றதுடன், கடற்கரையோர வீதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்களில் நின்ற இராணுவத்தினரிடம் - பிரியமுள்ள இராணுவச் சகோதரனுக்கு என்ற தலைப்பில் எமது நிலம் எமக்கு வேண்டும் என வரையப்பட்ட துண்டுப் பிரசுரங்களும், அவர்களைத் தமது உடமைகளுடன் வெளியேறுமாறு கோரி சாக்குகளையும் கொடுத்தபடி சென்றனர்.

இவ்வாறு சென்ற பேரணி சுப்பர்மடம் கடற்தொழிலாளர் சங்க முன்றலை வந்தடைந்ததும், அங்கு யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் தலைமையில் மாபெரும் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

இதன் பின் தமிழீழத் தேசியத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் மகஜர்கள் மக்கள்முன் வாசிக்கப்பட்டு யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனச் செயலாளரினால் தமிழீழ கடற்தொழிலாளர் சங்கங்களின் மேலாளர் வ.மோகனிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் ஐ.நா. செயலர் கொபி அனானுக்கும், ஐரோப்பிய ஒன்றியத் தலைவருக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது இந்தக் கண்டனப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பி னர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாதர் சங்க உறுப்பினர்கள் உட்பட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். (தி) (14)

## பொதுக்கட்டமைப்பு...

திருத்திக்கொள்ள முடியாத ஒரு காட்டிக்கொடுப்பாக அமைந்துவிடும்.

அதுமட்டுமன்றி - பொதுக்கட்டமைப்பு யோசனையை பிரேரணையாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதையும் நாம் எதிர்க்கவேண்டும். அந்தப் பிரேரணை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படுமாயின் அது அரசியலமைப்பை மீறும் செயலாக அமையும். அதன்மூலம் நாட்டுக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் விடுதலைப் புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரம் கிடைக்கும்.

பொதுக்கட்டமைப்புக் காரணமாக நாட்டில் அராஜகமான நிலையும் நிலையற்ற அரசியல் சூழலும் உருவாகி வருகின்ற அதேநேரம் - விடுதலைப் புலிகள் - இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக வெற்றிபெற்று வருகின்றனர். முழு நாடுமே நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான அனைத்து அரசியல் மற்றும் தேசப்பற்றுள்ள சக்திகள் - தமது அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பால் நாட்டின் ஒற்றுமையை முதன்மை கொண்டு பாடுபடவேண்டும்.

அதேபோல பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் அரசியல் கட்சிகள் - அதிகாரவர்க்கக் கருத்துக்களுக்கு அடிபணியாமல் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக ஒன்றிணையுமாறு வேண்டுகோள் விடுக்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# வலையால் பாதித்த கடற்பறவைகள்

பிரிட்டனின் வட கடல் பகுதியில் கரையோர மீன்பிடியை அதிகாரிகள் தடைசெய்ததன் மூலம், இந்தப் பகுதியிலுள்ள அரிய இன கடற்கரைப் பறவைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.


சிறிய துவாரங்களைக் கொண்டே மீன்பிடி வலைமூலம் மீன்பிடித்தால், மீன் குஞ்சுகள் இறந்துவிடுகின்றன.



தற்போது மீன்களின் தொகையை இந்தப் பகுதியில் அதிகரிக்கும் வகையில் இத்தகைய வலைகள் உபயோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய வலை மூலம் மீன் இனம் இந்தப் பகுதியில் முற்றாக அருகுவதால், பஃபின் போன்ற கடற் பறவைகளின் பெருக்கம் கடந்த ஆண்டு மோசமான நிலையை அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# ரோபோ குப்பைத் தொட்டி



தற்போது அபிவிருத்தியடைந்த மேல்நாடுகளில் ரோபோக்கள் மூலம் குப்பைத் தொட்டிகளை இயக்கும் முறை வந்திருக்கிறது.

இது சூரியசக்தியால் இயங்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சக்தியிலும் காணப்படுகின்ற இந்த வகைக் குப்பைத் தொட்டிகள் – தாமாகவே இயங்கக் கூடியவை.

அத்துடன் குப்பைத் தொட்டிகளின் வெளியே குப்பை போடுபவர்களை எச்சரிக்கை செய்யக் கூடியவையாகவும் உள்ளன. இதற்காக லண்டன் மாநகரத்தில் மட்டும் கிட்டத்தட்ட 110 ஆயிரம் ஸ்ரேலிங்பவுண்கள் செலழிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனுடன் மக்கள் அமர்வதற்கு ஒரு வாங்கும் போடப்பட்டுள்ளது. இதிலே இருப்பவர்கள் குப்பைகளை ரோபோக் குப்பைத் தொட்டிகளில் தான் போடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் எச்சரிக்கை செய்யப்படுவார்கள் என இத்தகைய ரோபோக்களை உருவாக்கியவர் கூறுகிறார்கள்.

# சீமன்ஸ் எழுச்சி




பிரபல ஜேர்மன் மொபைல் கம்பனியாகிய சீமன்ஸ் கம்பனியினருடைய கையடக்கத் தொலைபேசி உற்பத்தி – மிகவும் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தது.

இதேநேரத்தில் அவர்கள் எடுத்த அதிரடி நடவடிக்கை காரணமாக – 2005 ஆம் ஆண்டில் ஓரளவு நல்ல விற்பனை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் 350 மில்லியன் யூரோக்கள் வரை அந்தக் கம்பனி சம்பாதித்துள்ளது. இந்தக் கம்பனி பென்கு என்ற தாய்வான் நிறுவனத்துடன் இணைந்து, தம்முடைய விற்பனையளவை அதிகரித்ததாகக் கூறப்படுகிறது.

பழைய சீமன்ஸ் போன்களிலும் பார்க்க, புதிய வடிவ சீமன்ஸ் போன்கள் மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன. ஏறத்தாழ சாம்சங் கம்பனியினரின் கையடக்கத் தொலைபேசிகளை ஒத்த வடிவில் இவை இருப்பதால், இவற்றினுடைய விற்பனையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது எனத் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள்.

# D.V.D போட்டி




உயர் உணர்திறன் உள்ள DVD ஐத் தாம் தயாரித்துள்ளதாக, ரொஷிபா நிறுவனம் அறிவித்துள்ளது.




சொனியின் தயாரிப்புக்குப் போட்டியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த DVD - ஒரு முறை பதிவுசெய்யக்கூடியவாறு விசேட சேர்வை ஒன்றால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேதனச் சேர்வை குறுகிய அலை வரிசைக்கும் நன்கு உணர்திறன் மிக்கதாகும்.

அண்மைக்காலமாக ரொஷிபாவும், சொனியும் நவீன ரக DVD க்களை உற்பத்தி செய்வதில் போட்டியிட்டு வருகின்றன.

# அணு உலையால் புற்றுநோய்?




அணுசக்தி மின் உற்பத்தி நிலையங்களுக்கருகில் வசிப்பதால், சிறுவர்களுக்கு புற்றுநோய் வரும் என்பதற்கு எந்தவிதமான ஆதாரபூர்வமான தடயங்களும் இல்லை என -பிரிட்டிஷ் மருத்துவ ஆய்வு ஒன்று கூறுகிறது.

கடந்த 1963 - 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் 32 ஆயிரம் சிறுவர், புற்றுநோயால் பாதிப்புற்றுள்ளனர். இவர்களில் அநேகமானோர் இத்தகைய மின் நிலையங்களிலிருந்து 25 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் வசித்தவர்களேயாவர்.

எனினும், அணுக்கதிர்வீச்சே புற்றுநோய்க்குக் காரணம் என்பதை முழுமையாக ஏற்க முடியாது எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# எலித்தொல்லை



பெரிய நகரங்களில் எல்லாம் எலிகளுடைய தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது. நகரப்புறங்களில் 12 அடி ஆழத்தில் எலிகள் தங்களுடைய பதுங்குகுழிகளை அமைத்து, அங்கே பெருமளவாக பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன.

அதிலும் மிக முக்கியமாக எலிகள் தங்களுடைய அட்டகாசத்தை எல்லாம் முடித்து விட்டு, பாரிய குழிகளில் பதுங்குவதால், அவற்றைப் பிடிப்பது கடினமாகிறது. இவற்றை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். தற்போது மருத்துவத்துறையின் ஆய்வுகளின்படி, எலிகள் பல்கிப் பெருகும் தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கு, அவற்றின் பாலியல் ஓமோன்களில் ஏதேனும் செய்ய முடியுமா என மிருக வைத்தியர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை விட எலிகள் கடித்து நோயாளிகள் பலர் ஐரோப்பிய நாடுகளில் இறந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## திரை விமர்சனம்

# உள்ளம் கேட்குமே



'ஆட்டோகிராப்' படத்தின் கதைபோலவே இதுவும் இருக்கிறது.

[illegible] ஆர்யா, அஷின், லைலா, பூஜா ஆகியோர் ஒன்றாகக் கல்லூரியில கல்வி கற்கின்றார்கள். மூவரும் முறையே ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். படிப்பு முடிந்து சந்திக்காமல் இருந்தவர்கள், ஆர்யாவின் திருமணத்தில் ஒன்று சேர்கிறார்கள். இந்த இடத்தில் இயக்குநர் ஜீவா மிகவும் அற்புதமாகத் தனது பாணியைக் காட்டியிருக்கிறார்.

ஒரு முக்கோணக் காதல் கதையையே தந்திருக்கிறார் இயக்குநர். இந்தப் படத்தில் லைலாவின் சிறுபிள்ளைத்தனத்துடன் கூடிய குறும்புத்தனம் - ரசிக்கக்கூடியது போல் உள்ளது.

கல்லூரிச் சிட்டுகளின் கதை என்பதால், இயக்குநர் வெளுத்து வாங்கியிருக்கிறார். கல்லூரியில் வழமையாக வருகின்ற காட்சிகளைப் புறந்தள்ளிவிட்டு, புதிய வகையான அம்சங்களைத் தொட்டதற்காக இயக்குநரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இப்படி மூன்று சோடிகளை வைத்து மூவருக்கும் சம அந்தஸ்து வழங்கியது ஒரு ஹிந்திப்படச் சாயலை உருவாக்குகிறது.

ஹரிஸ் ஜெயராஜின் இசையில் பாடல்களில் மெலடி தாராளம். உண்மையில் இந்தப் படம் வழக்கமான காதல்கதையைவிட, சற்று புதியதாக உள்ளதை மறுக்கமுடியாது.

- மேகலா

# ஒக்கிட் தரும் வாசம்



ஒக்கிட் தாவரங்கள் உலகம் முழுவதிலும் எல்லோராலும் விரும்பப்படுகின்ற தாவரங்களாக இருக்கின்ற காரணத்தால், அவற்றினுடைய கேள்வி உலகம் முழுவதிலும் அதிகரித்துக் காணப்படுகிறது. உலகம் முழுவதிலும் 20 ஆயிரம் ஒக்கிட் தாவர இனங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அதிலும் 50 இனங்கள் மிகவும் பெறுமதி கூடியதாகவும், அத்துடன் பெரியளவில் காணப்படுபவையாகவும் இருக் கின் றன.


இந்த ஒக்கிட் தாவரங்கள் பாலியல் உணர்வுகளை அதிகரிக்கச் செய்பவையாகவும் இருக்கின்றன எனவும் கூறப்படுகிறது. தாவர ஆய்வாளர்கள் ஒக்கிட் பூக்களைப் பற்றிப் பல்வேறு விதமான கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

அதில் இவற்றின் மணம் மக்களைக் கவரக்கூடியதாக இருக்கிறது என்ற முடிவை விட, மக்கள் இத்தகைய நறுமணத்தின் மூலம் உளவியல் ரீதியாக மாற்றங்களை உணர்கிறார்கள் எனவும் கருதப்படுகிறது. ஒரு காணியில் ஒக்கிட் மரமே மிகவும் உன்னத தாக்கத்தை விளைவிக்கும் எனவும் கருதப்படுகிறது.

# யானைக்கு மிளகாய் வெடி

பற்றறியில் இயங்கும் மிளகாய்த்தூள் பொறிவெடி மூலம், கிராமங்களினுள் யானைகள் புகுவதைத் தடுக்க அஸாம் வன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


மிளகாய்த்தூள் குண்டுடன் ஒரு வயரை வீடுகளுடன் இணைப்பதன் மூலம், யானைகள் கிராமத்துக்குள் நுழையும்போது, இந்த மிளகாய் குண்டுகளை வெடிக்க வைத்து, யானைகளை விரட்ட முடியும்.



அஸாமில் காணப்படும் சில வகை மிளகாய்த்தூள்கள் - யானைகளை விரட்டக்கூடிய காரம் கொண்டவை எனக் கூறப்படுகிறது.

இதன்மூலம் இரவில் கிராமவாசிகள் யானைகள் குறித்த அச்சத்தால் விழித்திருக்க வேண்டிய அவசியமில்லை. அஸாமில் குடிசனப் பெருக்கம் யானைகளின் வாழ்விடங்களைப் பாதிப்பதாலேயே யானைகள் இவ்வாறு குடிமனைகளினுள் அடிக்கடி நுழைகின்றன எனக் கூறப்படுகிறது.

# பறவைகளுக்கு எமனாகும் காற்றாடி




கடற்கரைகளில் அமைக்கப்படும் சக்தி பிறப்பாக்கிகளான காற்றாடிகளால் புலம்பெயரும் பறவை இனங்கள் பலத்த சவாலை எதிர்கொள்வதாக ஆய்கள்மூலம் தெரியவந்துள்ளது.

இந்தப் பாரிய இயந்திரங்களுள் ஒருவிதமான பறவைகள் சிக்குண்டு ஆபத்தை எதிர்நோக்குகின்றன. டென்மார்க்கின் கரையோரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய இரு காற்றாடி ஆலைகளே இந்த அச்சுறுத்தலை பறவைகளுக்கு விடுத்துள்ளன.

புலம்பெயரும் காலத்தில் வாத்துகளே அதிகமாக இந்தப் பகுதியூடாகச் செல்வது வழமை. தமது குஞ்சுகளைக்கூட இவை இந்தப் பாதையூடாகவே கொண்டு செல்வதாகக் கூறப்படுகிறது.

# திமிங்கல வேட்டைக்கு கோரிக்கை





திமிங்கல வேட்டைக்கு அனுமதிக்குமாறு சர்வதேச திமிங்கல வேட்டைக்கான கமிஷனிடம் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும், இதற்கு அவுஸ்ரேலியா கடும் எதிர்ப்புத் தெரி வித்துள்ளது.

தற்போது விஞ்ஞான ஆய்வுகளுக்காக மட்டும் மட்டுப்படுத்திய அளவில் , திமிங்கல வேட்டைக்கு சர்வதேச சமூகம் அனுமதித்துள்ளது. எனினும் பிரதான திமிங்கல வேட்டை நாடுகளான ஜப்பான், நோர்வே, ஐஸ்லாந்து என்பன தற்போது திமிங்கல இனத்தின் தொகை, வேட்டையாடுவதற்குப் போதுமான அளவில் அதிகரித் துள்ளதால் வேட்டைத் தடையை தீர்க்குமாறு கோரியுள்ளன. ஜப்பான் தனது விஞ்ஞான மற்றும் உணவுத் தேவைக்கு திமிங்கல வேட்டையை அதிகரிக்க அனுமதிக்குமாறு கோரியுள்ளது.

# அழியும் போர்னியோக் காடு



தென்கிழக்கு ஆசியத் தீவான போர்னியோவில் இன்னும் ஒரு தசாப்த காலத்தில் முழு காட்டு மரங்களும் அழிந்து விடும் என சூழலியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். சட்டவிரோத மரத்தறிப்பு, எண்ணை மரச்செய்கை **(Oil Palm)** க்கான காடழிப்பு என்பவற்றால், தீவின் காட்டுவளம் அழிக்கப்பட்டு வருகிறது. இன்னும் 15 வருடத்தில் இந்தக் காட்டில் மட்டும் காணப்படும் **Orang - utan** குரங்கு - குள்ள யானை இனம் **(Pygmy Elephant)** என்பன உலகிலிருந்து மறைந்து விடலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 1.3 மில்லியன் ஹெக்ரேயர் காடு அழிக்கப்பட்டு வருகிறது. 2020 ஆம் ஆண்டில் காடு முழுமையாக போர்னியோவிலிருந்து இல்லாமற் போய்விடும் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது.